விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 165 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 19 செவ்வாய்க்கிழமை (02.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## வவுனியா மாவட்ட அரச அதிபராக தமிழர் ஒருவரை நியமியுங்கள்

### கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவையிலுள்ள தமிழர் ஒருவரை நியமிக்குமாறு அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன். அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளார்.


அது தொடர்பில் அவர் விடுத்த கோரிக்கையில்,

02ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பல்கலையில் வெசாக் கூடுகள் சேதம்

### கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பல கலைக்கழக வளாகத்தி னுள் அமைக்கப்பட்டி ருந்த வெசாக் கூடுகள்,



15ஆம் பக்கம் பார்க்க

### மல்லாவியைச் சேர்ந்தவர்

## பிரான்ஸ் பொலிஸாரால் சுட்டுக் கொலை

(முல்லைத்தீவு)
பிரான்ஸ் பாரிஸ் வடகிழக்கு புறநகர்ப் பகுதியில் முல்லைத்தீவு மல்லாவியைச் சேர்ந்த நபர் ஒருவர் பிரான்ஸ் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க

### செம்மணி மனிதப் புதைகுழியில்

# புதிய என்புக்கூட்டு தொகுதி அடையாளம்

*(யாழ்ப்பாணம்)*
செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து புதிதாக மனித என்புக்கூட்டுத் தொகுதி ஒன்று நேற்றுத் திங்கட்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)



### யாழில் லொத்தர் மூலம்

## 65 இலட்சம் ரூபாய் பெற்ற அதிர்ஷ்டசாலி

(கொழும்பு)
அபிவிருத்தி லொத்தர் சபையின் (DLB) 'ராசி அதிஷ்டம்' லொத்தர் சீட்டிழுப்பில், யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கு 65 இலட்சத்திற்கும் அதிக

02ஆம் பக்கம் பார்க்க

## வெசாக்கையொட்டிய இரு நாட்களில் இடம்பெற்ற விபத்தில் 24 பேர் பலி

(கொழும்பு)
வெசாக் தினங்களான கடந்த மே 29 மற்றும் 30 ஆகிய இரு தினங்களில் மாத்திரம் நாடு முழுவதும் இடம்பெற்ற 19 வீதி விபத்துக்களில் 24 பேர் உயிரிழந்துள்ளதாகப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் டப்ளியூ.பீ.ஜே.சேனாதீர தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இந்தப் புள்ளிவிபரங்களை வெளியிட்டார்.

குறித்த இரு தினங்களில் பதிவான ஒட்டு

15ஆம் பக்கம் பார்க்க

## இந்திய உயர்ஸ்தானிகர் இன்று யாழ்ப்பாணம் விஜயம்

### முக்கியஸ்தர்கள் பலரைச் சந்திப்பார்

(கொழும்பு)
இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார். இதன்போது அவர் பல்வேறு முக்கியஸ்தர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் தமிழக முதலமைச்சர் ஜோசப் விஜய், பாரத பிரதமர்

02ஆம் பக்கம் பார்க்க

## யாழில் காணாமல்போன கடற்றொழிலாளர்களை

### தேடும் பணி 5ஆவது நாளாக தொடர்கின்றது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் பகுதியில் இருந்து கடந்த 27ஆம் திகதி இரவு கடலுக்குச் சென்ற நான்கு கடற்றொழிலாளர்கள் இது வரை கரைக்குத் திரும்பாத நிலையில், அவர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

இதற்கமைய, காணாமல்போன கடற்றொழிலாளர்களைத் தேடும் பணி

15ஆம் பக்கம் பார்க்க

## அச்சுவேலியில் வீதி விபத்து

### குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)
அச்சுவேலியில் இடம் பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்து சிகிச்சையின் பின் வீடு திரும்பிய இளம் குடும்பஸ்தர் ஒருவர்

15ஆம் பக்கம் பார்க்க

## அநுராதபுரத்தில் மதகுருவால் சிறுமி துஷ்பிரயோகம்

### கண்டனம் தெரிவித்து வவுனியாவில் போராட்டம்




15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது ... க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா...

வவுனியா மாவட்டத்துக்கு தமிழர் ஒருவரை அரசாங்க அதிபராக நியமிக்குமாறு வவுனியா மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

எனினும் அந்த மக்களின் ஆதங்கம் இந்த நாட்டின் ஜனாதிபதியைச் சென்றடையவில்லை என்பதை ஊகிக்கமுடிகிறது.

வவுனியா மாவட்டத்தின் அரசாங்க அதிபராக பெரும்பான்மை இனம் சார்ந்த ஒருவரை நியமிக்கும்போது, அதனால் வவுனியா மாவட்ட தமிழ் மக்கள் தங்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூற முடியாத நிலைமைக்கு ஆளாகின்றனர்.

தவிர, வவுனியா மாவட்டத்திலுள்ள அரச காணிகள் தொடர்பிலும் பல்வேறு சிக்கல்கள் எழுந்துள்ள நிலைமைகளைக் காணமுடிகிறது.

எனவே வவுனியா மாவட்டத்தின் அரச அதிபராகத் தமிழர் ஒருவரை நியமிப்பதுதான் மேற்கூறிய விடயங்களுக்குத் தீர்வாக அமையும் எனக் குறிப்பிட்டுள்ள கலாநிதி ஆறு.திருமுருகன், வவுனியா மாவட்ட அரச அதிபருக்குப் பொருத்தமான தமிழ் நிர்வாகிகள் நம் வட மாகாணத்தில் உள்ளனர்.

எனவே இது விடயத்தில் எங்கள் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனம் செலுத்தி உரியவர்களிடம் வலியுறுத்த வேண்டும் எனவும் கேட்டுள்ளார். (ந-7)

## இந்திய...

நரேந்திர மோடி உடனான சந்திப்பில் வலியுறுத்தியிருந்த நிலையில் இந்திய உயர்ஸ்தானிகரின் யாழ்ப்பாண விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

அதேவேளை யாழ்ப்பாணத்திலும் இந்திய அரசினால் நிர்மாணிக்கப்பட்ட திருவள்ளுவர் கலாச்சார மத்திய நிலைய பராமரிப்புத் தொடர்பான மத்திய அரசு மற்றும் யாழ் மாநகர சபை இடையிலான முறுகல் நிலைமைக்கு மத்தியில் சந்தோஷ் ஜாவின் இவ்விஜயமானது பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (ம-7)

## 65 இலட்சம்...

பெறுமதியுடைய சுப்பர் ஜக்பொட் பரிசு கிடைக்கப் பெற்றுள்ளது.

நேற்றையதினம் (01) நடைபெற்ற குலுக்கலில் புத்தூர் மற்றும் நீர்வேலிப் பகுதியின் உத்தியோகபூர்வ லொத்தர் விற்பனை முகவரான ஜெயபாலன் துளசிகன் என்பவர் விற்பனை செய்த லொத்தர் சிட்டிகையே அறுபத்தைந்து இலட்சத்து எண்பத்தேழாயிரத்து நானூற்று எழுபத்தாறு ரூபாய் பரிசுத் தொகை கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த விசேட வெற்றி மற்றும் பரிசு விபரங்கள் குறித்த உத்தியோகபூர்வ தகவலை அபிவிருத்தி லொத்தர் சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் எம். தவகோகுலன் ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.(ம-7)

# வல்வையில் ரூ 1.15 கோடி திருட்டு இருவர் கைது; ரூ 74 இலட்சம் மீட்பு



(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை கொம்மாந்துறைப் பகுதியிலுள்ள வீடொன்றில் ஒரு கோடியே 15 லட்சம் ரூபா பணத்தைத் திருடிய குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முறைப்பாட்டின் அடிப்படையில் சி.சி.ரி.வி. கமரா பதிவுகளை பொலிஸார் ஆய்வு செய்த வேளை கடந்த 27ஆம் திகதி வீட்டில் ஆட்கள் இல்லாத நேரத்தில் புகைக்கூட்டை உடைத்து வீட்டிற்குள் நுழைந்த இருவர், அங்கிருந்த பெருமளவிலான பணத்தை எடுத்துச் சென்றமை சி.சி.ரி.வி. கமராக்களில் பதிவாகியிருந்தது.

அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், கெருடாவிலைச் சேர்ந்த 16 வயதுச் சிறுவனும் 19 வயது இளைஞனும் சந்தேகநபர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

அதையடுத்து சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 74 லட்சம் ரூபா பணம் மீட்கப்பட்டது.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில், பணம் இருப்பதை நெடுங்கேணியிலுள்ள ஒருவருக்கு வீடியோ அழைப்பின் மூலம் தெரிவித்ததுடன், அவரது ஆலோசனைக்கமைய பணத்தை எடுத்துச் சென்று நெடுங்கேணியில் காணியொன்றில் புதைத்து வைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

அவரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்தவேளை சம்பவத்துடன் தொடர்புடைய நெடுங்கேணியைச் சேர்ந்த நபர் தலைமறைவாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந் நிலையில் அவரைக் கைது செய்வதற்கான விசாரணைக்ள் முடுக்கி விடப்பட்டுள்ளன. (ம-7,60)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திருமதி காமினி ஜெயராசா**

(SLTS 2 - 1 கர்நாடக சங்கீதம்)

02.06.2026 இன்று பேராதனைப் பல்கலைக்கழகத்தில் **கலைமாணிப் பட்டத்தைப்** பெறும் எமது பாடசாலை ஆசிரியை திருமதி காமினி ஜெயராசா அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரது பணி மென்மேலும் சிறக்க இறை ஆசிகளை வேண்டிவாழ்த்துகின்றோம்.

(7765)

**வாழ்த்துவோர் :**

**அதிபர், ஆசிரியர்கள்,**
**கல்வி சாரா ஊழியர்கள்**
**யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்**


## புதிய ...

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் 13 ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று ஆரம்பமானது.

அகழ்வுப் பணிகளின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த சட்டத்தரணி வி.எஸ்.நிரைஞ்சன், புதிதாக மனித என்புக் கூட்டுத் தொகுதி ஒன்று நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்துடன் மொத்தமாக 262 மனித என்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏற்கெனவே 260 மனித என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் நேற்று அடையாளம் காணப்பட்டதும் அகழ்தெடுக்கப்பட்டதும் என்றார்.

மேலும், சான்றுப் பொருட்களாக மனித என்புக்கூட்டுத் தொகுதியின் கழுத்தில் காணப்படுகின்ற காசு வடிவிலான பொருளொன்று 99 ஆவது சான்றுப் பொருளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அதனோடு மேலும் சில மனித என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை சுத்தப்படுத்தப்பட்டு இலக்கமிடப்படவில்லை.

மேலும், அந்த எலும்புக்கூட்டுடன் தேங்காய் ஒன்றின் முழுமையான சிரட்டைக் கோதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக எரிதகன மேடையின் அத்திவாரமும் ஒரு பகுதி அகழ்வுப் பணி நடைபெறும் பகுதியில் இடிந்து விழுந்துள்ளது என்றார்.

யாழ்ப்பாணம் நீதிவான் எஸ்.லெனின்குமார் முன்னிலையில் நடைபெற்ற அகழ்வுப் பணிகளில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்றனர். (ம-7,33)


## கூறுவிலை கோரல்

**குளிரூட்டப்பட்ட (Air Condition) மண்டபமாக மாற்றுதல்**

எமது தலைமை அலுவலகத்தின் 50×30 அளவு விஸ்தீரனம் கொண்ட கூட்டுறவாளர் மண்டபத்தினை குளிரூட்டப்பட்ட (Air Condition) மண்டபமாக மாற்றம் செய்வதற்கு அனுபவம் வாய்ந்த நிறுவனங்களிடம் கூறுவிலை கோரப்படுகின்றது. மேற்படி வேலைகளை செய்ய விரும்புபவர்கள் நேரில் வருகை தந்து மண்டபத்தை பார்வையிட்டு எம்மால் வழங்கப்படும் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து தங்களது கூறுவிலையை எதிர்வரும் 09.06.2026ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்க கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பொதுமுகாமையாளர்**
**யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)**
**இல. 52, சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி - 021 222 5072**

(5764)



# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10.12.1939 மறைவு 31.05.2026

எமது பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு.பாலசுப்பிரமணியம் மேகவண்ணன்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் பத்மநாதன் பாலசுப்பிரமணியம்**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் – சுகாதார அமைச்சு கிழக்கு மாகாணசபை.)

அவர்கள் 31.05.2026 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

(C-5763)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துங்கள்

## ஆளுநர்களின் சங்கம் அவசர கோரிக்கை

(கொழும்பு)

**மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என ஆளுநர்களின் சங்கம் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.**

இது தொடர்பாக அந்த சங்கம் விசேட அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

தேர்தல் நடத்தப்படாமல் ஆளுநர்களின் ஆட்சியின் கீழ் மாகாண சபைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வது, மாகாண நிர்வாகம் வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளதால், தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து அரசியல் கட்சிகளும் பழைய மாவட்ட தேர்தல் முறையின் கீழ் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதால், மக்கள் பிரதிநிதிகளுடன் மாகாண சபைகளை மீண்டும் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநர்களின் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் பல சந்தர்ப்பங்களில் மாகாண சபை உறுப்பினர்களின் பதவிக்காலம் நிறைவடைந்ததையடுத்து, மக்கள் பிரதிநிதிகள் எவருமில்லாத சபைகளே தற்போது மாகாண மட்டத்தில் செயற்பட்டு வருகின்றன.

இதன் காரணமாக, ஆளுங் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரம் மாகாண சபையின் அன்றாடக் காரியங்களில் தலையிட்டு வருவதாக ஆளுநர்களின் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரசாங்கத்திலோ அல்லது அரச சேவையிலோ எந்தவொரு பதவியையும் வகிக்காத, கட்சியின் செயலாளராக மாத்திரம் பதவி வகிக்கும் டில்வின் சில்வா, யாழ்ப்பாணத்தில் வைத்து மாகாண சபை தேர்தல் இந்த ஆண்டில் நடத்தப்பட மாட்டாது என அண்மையில் தெரிவித்திருந்தார்.

இருப்பினும் எந்தவொரு கட்சியின் செயலாளருக்கும் மாகாண சபைகளின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அதிகாரம் கிடையாது என ஆளுநர்களின் சங்கம் திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ளது. (நி)

# கியூ.ஆர் முறைமை இறுக்கமாக செயற்படுத்தப்படும்

## எரிசக்தி அமைச்சர் அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கியூஆர் முறைமையை எதிர்காலத்திலும் கடுமையாக செயற்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக, துறைமுகங்கள், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் எரிசக்தி அமைச்சர் அனுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் பங்கேற்றபோது அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

தற்போது நிலவும் நெருக்கடியான காலகட்டத்தில் எரிபொருள் நுகர்வை கட்டுப்படுத்துவதே இதன் நோக்கம். இதன் மூலம் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கம் ஓரளவிற்காவது தணிக்கப்படும் என நம்பப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தற்போது, உலக எரிபொருள் சந்தையில் எரிபொருள் விலைகள் கணிசமாக அதிகரித்துள்ளதால், பெரும் அளவிலான அந்நியச் செலாவணி நாட்டிலிருந்து வெளியேறி வருகிறது.

எனவே நாட்டிலிருந்து வெளியேறும் டொலர்களின் அளவை குறைக்க நாம் நடவடிக்கை எடுக்காவிட்டால், எரிபொருள் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் என்றும் விலை உயர்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே தற்போது செயற்படுத்தி வரும் கியூஆர் முறையை இன்னும் சற்று கடுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# அநுர அரசின் மீது அதிருப்தியில் மக்கள்

## ரோஹித எம்.பி குற்றச்சாட்டு



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் படுதோல்வியடைவது உறுதி என்பதால், எல்லை நிர்ணய விவகாரத்தைக் காரணம் காட்டித் தேர்தலை அரசாங்கம் தொடர்ச்சியாகப் பிற்போடும் என எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

களுத்துறையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது, "நாட்டு மக்கள் தற்போது ஒவ்வொரு மாத இறுதி நாட்களையும் அச்சத்துடன் தான் எதிர்கொள்கின்றார்கள். மத்திய கிழக்கில் நிலவும் மோதல்களைக் காரணம்காட்டி, ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கால அரசுகள் வெளியகக் காரணிகளால் நெருக்கடிக்குள்ளான போது, ஜே.வி.பியினர் அவ்வாறு செய்யலாம், இவ்வாறு செய்யலாம் என்று பாடம் கற்பித்தார்கள். ஆனால் இன்று அவர்கள் சர்வதேச நாணய நிதியம் கற்பிக்கும் பாடத்துக்கு அமைவாகவே செயற்பட்டு வருகின்றார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக்கொள்வதற்காக ஒட்டுமொத்த மக்களும் கடனாளியாக்கப்படுகின்றார்கள். நாணய நிதியத்தின் கட்டளைக்கு அமைவாகவே ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுகின்றது. இதனால் அரசின் மீது நாட்டு மக்கள் கடும் அதிருப்தியடைந்துள்ளார்கள்.

அரசின் மீதான மக்களின் இந்த அதிருப்தியை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அதற்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும்.

மாகாண சபைத் தேர்தலை இந்த ஆண்டு நடத்த முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிடுகின்றார். ஆனால், அவரது கருத்துக்கு முரணாக, மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்றும் தேர்தலுக்கு நிதி நெருக்கடி ஏதுமில்லை என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிடுகின்றார்.

எனவே மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் இவர்களில் யார் குறிப்பிடுவது உண்மை என்பதை அரசு நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். எங்களைப் பொறுத்தவரை ரில்வின் சில்வா குறிப்பிடுவதுதான் உண்மை.

இந்த அரசு மாகாண சபைத் தேர்தலை நடத்தாது. அவ்வாறு நடத்தினால் படுதோல்வியடைவது உறுதி என்பதால், எல்லை நிர்ணய விவகாரத்தைக் குறிப்பிட்டுக் கொண்டு அரசு மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ச்சியாகப் பிற்போடும்" என அவர் தெரிவித்தார். (நி)

# தன்சல் வரிசையில் நின்றவர்களை மோதித்தள்ளிய 'கெப்' ரக வாகனம்

- ❖ 6 பேர் உயிரிழப்பு
- ❖ 13 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில்
- ❖ மீகொட பகுதியில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு புறநகர் பகுதியான மீகொடை பகுதியில் தன்சல் ஒன்றுக்காக வரிசையில் நின்றிருந்தவர்கள் மீது வாகனம் ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த மேலும் 13 பேர் தீவிர சிகிச்சைக்காக ஹோமாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் குழந்தை ஒன்றும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவிசாவளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த கெப் ரக வாகனம் ஒன்றே, மீகொட பகுதியில் வழங்கப்பட்ட தன்சலுக்காக வரிசையில் நின்றிருந்தவர்கள் மீது மோதியது.

இதன்போது, வரிசையிலிருந்த 15, 32 மற்றும் 56 வயதுடைய மூன்று பெண்களும், 35 மற்றும் 38 வயதுடைய மூன்று ஆண்களும் உயிரிழந்துள்ளனர்.

கெப் ரக வாகனத்தின் 42 வயதான சாரதி தப்பிச் சென்ற நிலையில் கொடகம சந்தியில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் குறித்த கெப் ரக வாகனமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் கெப் ரக வாகனத்தை செலுத்திய சாரதி மது போதையில் இருந்தமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மீகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளையாட்டுச் செய்திகள்

## இந்தியாவில் சாதனை படைத்த வடமாகாண குத்துச்சண்டை வீரர்கள்



இந்தியாவில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் தங்கப் பதக்கம் உள்ளிட்ட வெற்றிக் கிண்ணங்களை பெற்ற குத்துச்சண்டை குழுவினர் நேற்று முன்தினம் பலாலி சர்வதேச விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

வடக்கு மாகாணத்தில் இருந்து பிரபாகரன் ரதுக்ஸன், நகுலேஸ்வரன் சிறீஹரிஸ், லெனின் சானுராஜ், முஹமட் றிலாஸ், புஸ்பநாதன் அஜந்தா ஆகிய வீர வீராங்கனைகள் இந்தியாவில் நடைபெற்ற குத்துச்சண்டை போட்டியில் பங்குபற்றினர்.

குத்துச்சண்டையில் எட்டு வகைகள் காணப்படுகின்ற நிலையில், இதுவரை வடக்கு - கிழக்கில் இருந்து எவரும் பங்கெடுக்காத வகையிலான குத்துச்சண்டை போட்டியிலேயே அவர்கள் பங்கெடுத்து சாதனையை நிலைநாட்டி நாடு திரும்பினர்.

அவர்களது பயிற்றுவிப்பாளரான தியாகராஜா நாகராஜா என்பவரும் அவர்களோடு உடனிருந்து போட்டியின்போது அவர்களை நெறிப்படுத்தினார். (3)

## சம்பியன் லீக் கொண்டாட்டத்தில் வெடித்த பாரிய மோதல்

### 200 இற்கும் மேற்பட்டோர் காயம்



சம்பியன்ஸ் லீக் கால்பந்து இறுதிப் போட்டியில் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, பிரான்ஸ் முழுவதும் கால்பந்து ரசிகர்களுக்கும் காவல்துறைக்கும் இடையே ஏற்பட்ட பயங்கர மோதல்களில் 219 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 8 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக பிரான்ஸ் உள்துறை அமைச்சர் லோரண்ட் நுனேஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கலவரத்தைக் கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த 57 காவல்துறை அதிகாரிகளும் இந்த மோதல்களில் காயமடைந்துள்ளனர்.

தலைநகர் பாரிஸில் பேருந்து மற்றும் தொடருந்து சேவைகளைப் பாதித்த இந்த வன்முறைகள் தொடர்பாக இதுவரை 780 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 450 இற்கும் அதிகமானோர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கலவரக்காரர்கள் மறிக்க முயன்ற பாரிஸின் சுற்றுவட்டச் சாலையில் ஏற்பட்ட விபத்தொன்றில் 24 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வன்முறைகளுக்கு மத்தியில், பி.எஸ்.ஜி அணியின் வெற்றிக் கொண்டாட்ட ஊர்வலம் ஈபிள் கோபுரப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் பங்கேற்புடன் அமைதியான முறையில் ஆரம்பமாகியுள்ளது.

இந்த ஊர்வலத்தின் பாதுகாப்பிற்காக மாத்திரம் சுமார் 6,000 காவல்துறையினர் குவிக்கப்பட்டுள்ளனர். (3)

## ஒரே சீசனில் ஏராளமான விருதுகளை வாரி குவித்த வைபவ் சூர்யவன்ஷி!

2026 ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியின் நிறைவில், இந்த பருவத்திற்கான முக்கிய விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் 15 வயது இளம் துடுப்பாட்ட வீரரான வைபவ் சூர்யவன்ஷி இந்த தொடரில் விளையாடிய 16 இன்னிங்ஸ்களில் 237.30 என்ற அதிரடியான ஓட்ட விகிதத்தில் 776 ஓட்டங் களைக் குவித்து செம்மஞ்சள் நிற தொப்பி விருதை வென்றுள்ளார்.

அத்துடன், ஒரே ஐ.பி.எல் பருவத்தில் அதிக ஓட்டங்கள் மற்றும் சிறந்த ஓட்ட விகிதம் ஆகிய இரண்டிலும் முதலிடம் பிடித்த கிறிஸ் கெய்லின் (2011) சாதனையையும் சூர்யவன்ஷி சமன் செய்துள்ளார்.

இந்தத் தொடரில் 72 சிக்ஸர்களை விளாசிய அவர், ஒரே தொடரில் அதிக சிக்ஸர்கள் (59) அடித்த கெய்லின் சாதனையை முறியடித்துள்ளதுடன், ஒரே பருவத்தில் "தொடர் நாயகன்" மற்றும் "வளர்ந்துவரும் வீரர்" ஆகிய இரு விருதுகளையும் வென்ற முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையையும் படைத்துள்ளார்.

வைபவ் சூர்யவன்ஷியின் அபார திறமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், "சூர்யவன்ஷி மிகவும் தனித்துவமான ஒரு வீரர். பந்துகளை அடித்து விளையாடுவது மட்டுமன்றி, மைதானத்தின் அனைத்து திசைகளிலும் பந்தை நகர்த்துவதற்கான அவரது மணிக்கட்டு அசைவுகள் என்னை மிகவும் கவர்ந்துள்ளன" எனப் பாராட்டியுள்ளார். (3)



## குஜராத் அணி சென்ற பேருந்தில் தீப்பரவல்

### வீரர்கள் உடனடியாக வெளியேற்றம்

இந்தியாவின் அஹமதாபாத்தில் நடைபெற்ற ஐ.பி.எல் 2026 இறுதிப் போட்டியில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி வெற்றி பெற்றது.

இந்த தொடரில் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து, குஜராத் டைட்டன்ஸ் அணிக்கு மற்றொரு பேரதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இரவு நரேந்திர மோடி மைதானத்தில் இருந்து வீரர்கள் தங்கியிருந்த விருந்தகத்திற்கு திரும்பிக் கொண்டிருந்த போது, அணியின் பேருந்தில் மின் கசிவு காரண மாக திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

எனினும், வீரர்கள் அனைவரும் உடனடியாக மற்றும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதால் பெரும் ஆபத்து தவிர்க்கப்பட்டது.

இந்த தீ விபத்து காரணமாக வீரர்கள் சுமார் ஒரு மணி நேரம் வீதியில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகமாக அதிகரிக்கும்

# டெங்கு, சிக்குன்குனியா தொற்றுகள்

(கொழும்பு)



**பருவமழை காரணமாக டெங்கு மற்றும் சிக்குன்குனியா தொற்றுகள் அதிகரித்து வரும் நிலையில், இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் பொதுமக்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்று, பொருத்தமான இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என விசேட மருத்துவர் மஹேஷக விஜயவர்தன எச்சரித்துள்ளார்.**

இந்த ஆண்டு ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் இதில் மேல் மாகாணம், குறிப்பாக கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவிலான தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் கடந்த சில வருடங்களாகக் குறைவடைந்திருந்த சிக்குன்குனியா தொற்றுகளும் தற்போது மீண்டும் அதிகரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், டெங்கு மற்றும் சிக்குன்குனியா ஆகிய இரண்டுமே "ஏடிஸ்" நுளம்புகள் மூலம் பரவுகின்றன.

காய்ச்சல், தலைவலி, உடல் வலி, மூட்டு வலி மற்றும் தோலில் ஏற்படும் தடிப்புகள் போன்ற ஒத்த அறிகுறிகளுடன் இவை ஆரம்பிப்பதால், ஆரம்ப கட்டத்திலேயே நோயைக் கண்டறிவது கடினமாக உள்ளது.

டெங்கு தீவிரமடைந்து "டெங்கு இரத்தப்போக்கு காய்ச்சலாக" மாறினால் அது உயிருக்கு ஆபத்தாக முடியும்.

காய்ச்சல் குறையத் தொடங்கும் போதே இந்த நோயாளிகள் அதிகளவில் சோர்வடைவர். எனவே கடுமையான சோர்வு, வயிற்று வலி மற்றும் கைகள் அல்லது கால்கள் குளிர்ச்சியடைதல் போன்ற அறிகுறிகளை ஒருபோதும் அலட்சியப்படுத்தக் கூடாது.

காய்ச்சல் உள்ள நோயாளிகள் ஆரம்ப கட்டத்தில் "ஸ்டெராய்டு அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகளை" பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில், இவை டெங்கு நோயாளர்களுக்கு இரத்தப் போக்கு ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கும் என தெரிவித்துள்ளார். (நி)

# மெட்ரோ பேருந்துகளுக்கு புதிய ஜி.பி.எஸ் கண்காணிப்பு

(கொழும்பு)


பயணிகள் தற்போது LMT GO மொபைல் செயலி மூலம் மெட்ரோ பேருந்துகளின் நிகழ்நேர இருப்பிடங்களையும் வருகை நேரங்களையும் கண்காணிக்க முடியும் என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

இந்த புதிய வசதியின் தொடக்க விழாவில் பேசிய குணசேன, ஜி.பி.எஸ் வசதியுடன் கூடிய இந்தச் சேவை, பேருந்துகள் தங்கள் நிறுத்தங்களுக்கு எப்போது வரும் என்பதைச் சரிபார்க்கவும் இயக்கப்படும் பேருந்து மற்றும் கட்டண விவரங்களைக் காணவும் வரவிருக்கும் இடங்களுக்கான உத்தேச பயண நேரங்களைக் கண்காணிக்கவும் பயணிகளுக்கு உதவுகிறது என்று குறிப்பிட்டார்.

மேலும், பயணிகளுக்கு மிகவும் திட்டமிடப்பட்ட, வசதியான மற்றும் நம்பகமான பயண அனுபவத்தை வழங்குவதே இந்த முயற்சியின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த புதிய சேவையைப் பயன்படுத்திக்கொள்ள, பயணிகள் LMT GO செயலியைப் பதிவிறக்கம் செய்யுமாறு பிரதி அமைச்சர் கேட்டுக்கொண்டார். (நி)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவம்



(தருமபுரம்)

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசிப் பெரும் பொங்கல் உற்சவம் நேற்றைய தினம் பல்லாயிரக்கணக்கான பக்த அடியவர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (8-316

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 700 | 650 | 700 | 800 | 800 | 650 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | -- | 200 | -- |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 300 | 350 | 500 | 350 |
| தக்காளி | 450 | 550 | 500 | 500 | 600 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 180 | 200 | 140 | 200 | 200 |
| கோவா | 250 | 300 | 300 | 260 | 300 | -- |
| கரட் | 350 | 450 | 500 | 350 | 500 | 450 |
| பூசணி | 120 | 120 | 100 | 100 | 150 | -- |
| புடோல் | 250 | 250 | 200 | 200 | 300 | 280 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 400 | 320 | 300 | 300 | 450 | 200 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | -- | 250 | 200 |
| பாகற்காய் | 1400 | 2000 | 1000 | 2000 | 1500 | 1000 |
| வெண்டக்காய் | 300 | 250 | 300 | 270 | 400 | 180 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 300 | 300 | 400 | -- |
| பயற்றங்காய் | 400 | 350 | 300 | 600 | 400 | 450 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 400 | 400 | - |
| பீற்றூட் | 350 | 500 | 400 | 350 | 600 | 350 |
| கறிமிளகாய் | 600 | 600 | 350 | 500 | 800 | 400 |
| முருங்கைக்காய் | 500 | 800 | 600 | 600 | 1000 | 800 |
| போஞ்சி | 600 | 700 | 800 | 600 | 800 | 750 |
| கத்தரிதம்புள்ள | 600 | 500 | 400 | -- | 700 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 200 | 120 | 150 | -- |
| தேசிக்காய் | 600 | 450 | 400 | 660 | 500 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 120 | 80-120 | -- |
| இராசவள்ளி | 350 | 400 | 350 | 350 | 300 | -- |
| வெங்காயப்பூ | 650 | 700 | 600 | -- | 700 | -- |
| முள்ளங்கி | -- | 250 | 200 | 160 | 400 | 250 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 80 | -- |
| வல்லாரை | 100 | 75 | 100 | -- | 80 | -- |
| [illegible] | -- | -- | 150 | -- | 250 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது





(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பிறந்தநாள் அறநிதிச் சபையினரால் வருடாந்தம் வழங்கப்படும் "இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது-2026" வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், 2026 ஆம் ஆண்டுக்கான இளந் தலைமுறை ஆற்றலாளர் விருதுகளை பேராதனைப் பல்கலைக் கழக கணனி பொறி யியல் துறைப் பேராசிரியர் றொசான் ஜி.றாகல் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை மகப்பேறு, பெண் நோயியல் சிறப்பு வைத்திய நிபுணர் பேராசிரியர் சிவலிங்கராஜா ரகுராமன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுடன், அண்மையில் வெளியிடப்பட்ட க.பொ.த உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி கணிதப் பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று வரலாற்றுச் சாதனை படைத்த மாணவன் தெய்வேந்திரன் திருக்குமரன் நிகழ்வில் சிறப்பு கௌரவிப்பைப் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் ஆன்மிகப் பெரியார்கள், கல்விமான்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். கலை, விளையாட்டு மற்றும் தமது தொழில்முறை நிபுணத்துவத்தில் இளையவர்களாய் சாதனை படைத்து வருபவர்களைக் கௌரவிக்கும் நோக்குடன் 2021 ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)




"உங்கள் புகை உங்கள் குடும்பத்தின் சிரிப்பை அணைத்து விடும்" எனும் தொனிப்பொருளில் சர்வதேச புகையிலை தடுப்பு தினத்தை முன்னிட்டு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/135 கிராம சேவகர் பிரிவில் புகைத்தலுக்கெதிரான விழிப்புணர்வு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை போதைப் பொருள் தடுப்பு உத்தியோகத்தர் எஸ். டுபின்சன் தலைமையில் நடைபெற்றது.

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகராலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கமும் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (8)



உரும்பிராயைச் சேர்ந்தவரும் லண்டனில் வாழ்பவருமாகிய பொறியியலாளர் எம் ரி. செல்வராஜா எழுதிய செம்பாட்டுச் சீமை என்ற உரும்பிராய் கிராமத்தின் சரித நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

## யாழ். பொது நூலக எரிப்பின் நினைவேந்தல் நிகழ்வு




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டு 45 ஆண்டுகள் நிறைவடைவதை முன்னிட்டு, நேற்றைய தினம் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில், நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணப் பொது நூலக ஸ்தாபகர் கே. எம். செல்லப்பா மற்றும் யாழ்ப்பாணப் பொது நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்ட அதிர்ச்சியிலும் வேதனையிலும் உயிரிழந்த அருட்கலாநிதி H.S. தாவீது அடிகள் ஆகியோரின் உருவப் படத்திற்கு மலர் தூபி சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து 45 ஆண்டுகள் நிறைவடைவதைக் குறிப்பிடும் வகையில் 45 விளக்குகள் ஏற்றப்பட்டது.

யாழ்.மாநகர சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்வில், மாநகர சபையின் ஆணையாளர் டி.சி. அரவிந்தராஜ், பிரதி முதல்வர் இ. தயாளன், நூலக உத்தியோகத்தர்கள் மற்றும் வாச கர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (8)

## சுற்றி வளைப்பு; 646 பேர் கைது



(கொழும்பு)

"முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 646 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 648 விசேட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (8)

## காங்கேசன்துறை- நாகபட்டினம் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்

(அராலி)


காங்கேசன் துறைக் கும் நாகப்பட்டினத்துக்கும் இடையில் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் சுபம் நிறுவனத்தின் சிவகங்கை கப்பலானது, நாளை புதன்கிழமை தொடக்கம் மீண்டும் சேவையில் ஈடுபடும் என அந்தக் கப்பல் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் கே.எம். ஜெயசீலன் தெரிவித்துள்ளார்.

கடலில் ஏற்பட்ட அசாதாரண காலநிலை காரணமாக கடந்த சில வாரங்களுக்கு முன்னர் குறித்த கப்பலானது பழுதடைந்த நிலையில் போக்குவரத்து சேவையானது இடைநிறுத்தப்பட்டது.

இந்நிலையில் குறித்த கப்பல் போக்குவரத்தானது நாளைய தினம் ஆரம்பமாக உள்ள நிலையில், கப்பல் போக்குவரத்து வழமை போல் செவ்வாய் தவிர்ந்த ஏனைய ஆறு நாட்களும் இடம்பெறும்.

எனவே www. sailsubham. com என்ற இணைத் தளத்திற்குள் பிரவேசிப்பதனூடாகவோ அல்லது 021 222 4647, 011 764 2117 என்ற இலக்கங்களுக்கு அழைப்பு மேற்கொள்வதன் மூலமாகவோ பயணச் சீட்டு களை பதிவு செய்துகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-104)

## யாழ். மாவட்ட எல்லே போட்டி வடமராட்சி கிழக்கு சம்பியன்




(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் நடப்பு ஆண்டுக்கான விளையாட்டு விழாவில், யாழ் மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் பெண்களுக்கான எல்லே போட்டியில் வடமராட்சி கிழக்கு பிரதேச இளைஞர் கழக பெண்கள் அணி முதலிடத்தைப் பெற்று சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

இப்போட்டியில் வடமராட்சி கிழக்கு பிரதேச சம்மேளனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, மணற்காடு சென். அன்றனிஸ் இளைஞர் கழகம் மிகச் சிறப்பான முறையில் அணியை ஒழுங்கமைத்து வெற்றியைக் கைப்பற்றியுள்ளது. (3-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எபோலா வைரஸ் அபாயத்தை எதிர்கொள்ள இலங்கை தயார்



## பொதுச்சுகாதார நிபுணர் துஷானி தாபரேரா

(கொழும்பு)

**எபோலா வைரஸ் பரவல் காரணமாக ஏற்படக்கூடிய எந்தவொரு அபாயகரமான சூழ்நிலையையும் எதிர்கொள்வதற்குத் தேவையான அனைத்து ஆரம்பக்கட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் இலங்கை மேற்கொண்டுள்ளதாகப் பொதுச் சுகாதார விசேட மருத்துவ நிபுணர் துஷானி தாபரேரா தெரிவித்துள்ளார்.**

எபோலா வைரஸ் தொடர்பான தற்போதைய நிலைமை குறித்து நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

உலகச் சுகாதார அமைப்பின் வழிகாட்டல்களுக்கு இணங்க, சுகாதார அமைச்சு இதற்கான தயார்நிலைத் திட்டங்களையும் பயிற்சிகளையும் ஏற்கனவே முன்னெடுத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எபோலா வைரஸ் பரவல் பதிவாகியுள்ள கொங்கோ மற்றும் உகண்டா ஆகிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் நபர்கள் குறித்து சிறப்புப் புலனாய்வு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் தனிமைப்படுத்தல் பிரிவு மூலமாக வானூர்தி நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் ஊடாக நாட்டுக்குள் நுழையும் பயணிகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

ஏதேனும் சந்தேகத்திற்கிடமான நோய் அறிகுறிகளைக் கொண்ட நபர்கள் அடையாளம் காணப்பட்டால், அது குறித்த தகவல்கள் உடனடியாகத் தொற்றுநோயியல் பிரிவுக்கு அறிவிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எபோலா தொற்றுக்குள்ளாகியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நோயாளர்களை அனுமதித்து, அவர்களுக்குத் தேவையான அவசர சிகிச்சைகளை வழங்குவதற்கும், பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தேசிய தொற்றுநோயியல் நிறுவனம் (ஐ.டி.எச். - அங்கொடை) முழுமையாகத் தயார்படுத்தப்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர் துஷானி தாபரேரா மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

### 98/5 , நெல்லியான் வீதி, வட்டாரம் –05

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 05, நெல்லியான் வீதியிலுள்ள இல: 98/5 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **விசாகப்பெருமாள் உமாபதி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு R.ரகுராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3405/2011.05.21 ஆம் இலக்க உறுதியால் **பொன்னம்பலம் வைத்திலிங்கம்** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **விசாகப்பெருமாள் உமாபதி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8584/02.02.2012 இலக்க உறுதியால் **செல்லன் செல்வராசா** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்திற்கான பாதைப்பாவிப்புரித்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**வேலன் சின்னையாவும் பெண் பிறேமாவதியும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8589/02.02.2012 இலக்க உறுதியால் குறித்த **விசாகப்பெருமாள் உமாபதி** ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**இரத்தினதுரை றஜீவன் பெண் றஜீமலர்** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7177/23.11.2015 ஆம் இலக்க உறுதியால் குறித்த **வேலன் சின்னையாவும் பெண் பிறேமாவதியும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஓர் பகுதியினை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: **"வெல்லங்கூடலும் மறுபிரிவுகளும்"**
இறை: **சுழிபுரம் இறை**
விஸ்தீரணம்: **நில.பர.இலா 01 1/2**
எல்லைகள்: **கிழக்கு** - சிவலிங்கம் பழனியின் ஆதனம் **வடக்கு**-மிகுதி நிலம், மேற்கு **மேற்கு**- ஒன்பது அடி அகலமான கையொழுங்கையும் மிகுதி ஆதனத்தின் பாதைப் பயன்பாட்டிற்காக மிகுதி ஆதனத்திலிருந்து கழித்துவிடப்பட்ட ஆறு அடி அகலமான கையொழுங்கையும், **தெற்கு** - ஒன்பது அடி அகலமான கையொழுங்கை
குறித்த **இரத்தினதுரை றஜீவன் பெண் றஜீமலர்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **இரத்தினதுரை றஜீவன் பெண் றஜீமலர்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**தவிசாளர்/ செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(7758)

## ஏற்றுமதி வருவாய் உயர்வு

(கொழும்பு)

2026 ஏப்ரல் மாதத்தில் இலங்கை தனது வரலாற்றிலேயே மிக உயர்ந்த மாதாந்திர ஏற்றுமதி வருவாயைப் பதிவுசெய்தது.

அதன்படி, அந்த மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி வருவாய் 1.38 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்ந்து, ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்ததாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இந்தச் சாதனை, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கும் அதே வேளையில், வெளிப்புற சவால்களை எதிர்கொள்வதில் இலங்கை ஏற்றுமதியாளர்களின் மீள்திறனைப் பிரதிபலிக்கிறது என்று அதன் தலைவரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான மங்கள விஜேசிங்க குறிப்பிட்டார். (நி)


## உடுவில் மகளிர் கல்லூரி

**2027 ஆம் ஆண்டிற்கான அனுமதி - தரம் I**

உடுவில் மகளிர் கல்லூரியில் தரம் I இற்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களை 02.06.2026-30.06.2026 காலப்பகுதிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

**இடம் :- உடுவில் மகளிர் கல்லூரி காரியாலயம்**
**நேரம் :- காலை 8.00 - மதியம் 2.30**

**அதிபர்**

(C-5762)


## துயர் பகிர்கின்றோம்

எமது வித்தியாலயத்தில் 1995-1998
வரையான காலப்பகுதியில்
அதிபராக சேவையாற்றி வித்தியாலய
வளர்ச்சியில் பங்காற்றிய
ஓய்வுநிலை அதிபர்

**அமரர். வேலுப்பிள்ளை சிவராசா**



அவர்களின் மறைவால் துயருற்றுள்ள
குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்தனை செய்கிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


**பழைய மாணவர் சங்கம் (தாய்ச் சங்கம் )**
**யா / கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்.** (C-5761)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாரதம்

## ‘கருப்பு’ திரைப்படம் ஹிட்!

# சாய் அபயங்கருக்கு விலையுயர்ந்த காரை பரிசளித்த நடிகர் சூர்யா



(டில்லி)

ஆர். ஜே. பாலாஜி இயக்கத்தில், சூர்யா நடிப்பில் கடந்த 15ஆம் திகதி வெளியான கருப்பு. திரைப்படத்தில் த்ரிஷா, இந்திரன்ஸ், நட்டி நடராஜன் சுப்பிரமணியம், ஸ்வாசிகா, ஷிவதா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரித்த இப்படத்திற்கு சாய் அபயங்கர் இசைய மைத்திருந்தார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் வெளியான கருப்பு திரைப்படம் ரசிகர்கள் மற்றும் விமர்சகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

தியேட்டர்களில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் இந்தத் திரைப்படம் உலகம் முழுவதும் ரூ.300 கோடியை கடந்துள்ளதாக படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்து இருக்கிறது.

திரையரங்குகளில் மூன்றாவது வாரத்தை நெருங்கும் கருப்பு திரைப் படம் வசூலில் மேலும் பல கோடிகளை ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந் நிலையில், கருப்பு பட வெற்றியை முன்னிட்டு மஹிந்த்ரா BE6 Batman Edition எனும் காரை இசையமைப்பாளர் சாய் அபியங்கருக்கு நடிகர் சூர்யா பரிசளித்துள்ளார். இதன் புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது. (3)

# லெபனானின் மு

# தட்டித் தூக்

(ஜெருசலேம்)

**தெற்கு லெபனானில் அமைந்துள்ள 900 ஆண்டுகள் பழைமை வாய்ந்த பியூபோர்ட் கோட்டையை இஸ்ரேல் கைப்பற்றி தமது நாட்டுக் கொடியை பறக்கவிட்டுள்ளது.**

லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தியுள்ள இஸ்ரேல், தெற்கு லெபனானில் அமைந்துள்ள முக்கிய மூலோபாயப் பகுதியான பியூபோர்ட் கோட்டையை கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்தக் கோட்டையை கைப்பற்றியுள்ளமை, ஹிஸ்புல்லாவுக்கு எதிரான நடவடிக்கையில் தீர்மானகரமான மாற்றம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

லிடானி ஆற்றை அடிப்படையாகக் கொண்டிருந்த முன்னைய எல்லைக் கோட்டைக் கடந்தும், இஸ்ரேல் தரைப்படைகள் தற்போது லெபனான் பகுதிக்குள் மேலும் ஆழமாக முன்னேறி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, தெற்கு லெபனானில் உள்ள மக்கள் வெளியேறுமாறு எச்சரிக்கப்பட்டுள்ள பகுதிகளின் எல்லையையும் இஸ்ரேல்

## ‘அமெரிக்கா 250’ இசை நிகழ்ச்சிகளை

# இரத்து செய்தார் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்கா 250 என்ற அமெரிக்காவின் 250 ஆவது சுதந்திரத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்கவிருந்த பல முன்னணி கலைஞர்கள், இந்த நிகழ்வு வெள்ளை மாளிகையுடன் கொண்டுள்ள அரசியல் பின்னணியைச் சுட்டிக்காட்டி விலகியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, “இந்த இசை நிகழ்ச்சிகளை ரத்து செய்யுங்கள்” என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது “ட்ரூத் சோஷியல்” தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன் விலகிய கலைஞர்களை “அதிக கட்டணம் வசூலிப்பவர்கள்” மற்றும் “சலிப்பான வர்கள்” என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

முன்னதாக, வோஷிங்டனில் உள்ள நேஷனல் மாலில் ஜூன் 25 முதல் ஜூலை 10 வரை நடைபெறவிருந்த “கிரேட் அமெரிக்கன் ஸ்டேட் ஃபேர்” கச்சேரித் தொடருக்காக கடந்த புதன்கிழமை 9 கலைஞர்கள் அறிவிக்கப்பட்டனர்.

எனினும், ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி மார்டினா மெக்பிரைட் , திகொமடோர்ஸ், யங் எம்சி மற்றும் பிரெட் மைக்கேல்ஸ் ஆகியோர் இந்த நிகழ்விலிருந்து விலகியுள்ளனர்.

“அரசியல் சார்பற்ற நிகழ்வு என்று கூறியே தங்களுக்கு அழைப்பு விடுக்கப் பட்டது, ஆனால் அது தவறாக வழிநடத்தப்பட்டுள்ளது” என விலகிய கலைஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தநிலையில், இசை கச்சேரிகளுக்குப் பதிலாக, அதே இடத்தில் பிரமாண்டமான “மேக் அமெரிக்கா கிரேட் அகெய்ன்” அல்லது “அமெரிக்கா ஈஸ் பேக்” என்ற பேரணியை நடத்துவது குறித்து ஆலோசித்து வருவதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (3)

## ரஷ்யாவின் எரிசக்தி மைய


# உக்ரைன் தொடர் தாக்

(கீவ்)

ரஷ்ய எரிசக்தி மையங்கள் மீது உக்ரைன் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றது. ரஷ்ய எரிசக்தி மையங்கள் மீது நேற்று முன்தினம் காலை வரை உக்ரைன் தாக்குதல்களை நடத்தியதாக ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.


மேலும், கிரெம்ளின் பகுதியில் உள்ள ஒரு முக்கிய அணுமின் நிலையம் மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் நிலையில் அதனை அந்நாடு மறுத்துள்ளது.

ரஷ்யாவின் தென்மேற்கில் உள்ள ரோஸ்டோவ் பகுதியின் எரிபொருள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# முக்கிய கோட்டையை
# க்கிய இஸ்ரேல்!



பாதுகாப்புப் படை மேலும் விரிவு படுத்தியுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ள லெபனான் பிரதமர், பொது மக்களை பாதிக்கும் வகையில் இஸ்ரேல் கூட்டு தண்டனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

லிடானி பள்ளத்தாக்கை மேலிருந்து கண்காணிக்கக்கூடிய உயரமான பகுதியில் அமைந்துள்ள பியூபோர்ட் சுமார் 900 ஆண்டுகளுக்கு முன்பு சிலுவைப் போராளிகளால் கட்டப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டையாகும்.

அந்தப் பகுதியின் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவதில் இந்தக் கோட்டை முக்கிய பங்கு வகித்து வந்துள்ளது.

முன்னதாக, 44 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற முதல் லெபனான் போரின் போதும் இந்தக் கோட்டையை இஸ்ரேல் படைகள் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கோட்டை கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அறிக்கையில், பிரதமர் நெதன்யாகு, "நாம் அச்சத்தின் தடையை உடைத்துவிட்டோம். சிரியா, காசா மற்றும் லெபனான் உள்ளிட்ட அனைத்து முனைகளிலும் முன்முயற்சியுடன் செயற்பட்டு வருகிறோம்" என தெரிவித்துள்ளார்.

மேலும், ஹிஸ்புல்லாவின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் இஸ்ரேலின் பிடியை மேலும் ஆழப்படுத்தி விரிவுபடுத்துவதே தமது நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (3)

# மியன்மாரில் பயங்கர வெடி விபத்து

* 46 பேர் உயிரிழப்பு
* பலருக்கு படுகாயம்



(நைப்பிடாவ்)

மியன்மார் நாட்டில் சுரங்கப் பணிக்காக கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்த வெடிபொருட்கள் வெடித்துச் சிதறியதில் 46 பேர் உயிரிழந்தனர்.

நாம்காம் நகரம் அருகேவுள்ள காவுண்டப் கிராமத்தில் உள்ள கட்டிடத்தில் சுரங்கத்தில் பாறைகளைத் தகர்க்கப் பயன்படுத்தப்படும் வெடி பொருட்கள் குவித்து வைக்கப்பட்டிருந்தன.

அவை திடீரென ஞாயிற்றுக்கிழமை அடுத்தடுத்து வெடித்துச் சிதறின.

இதில் 6 சிறார்கள் உட்பட 46 பேர் உயிரிழந்தனர். மேலும் 74 பேர் பலத்த காயமடைந்தனர்.

இந்த வெடி விபத்தில், அப்பகுதியில் இருந்த 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்த தகவலின்பேரில் சம்பவ இடத்திற்கு மீட்புக் குழுவினர் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

வெடி விபத்தில் காயமடைந்தோரில் பலரின் நிலை கவலையளிக்கும் வகையில் உள்ளதாகவும், இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது. (3)

# மையங்கள் மீது
# தாக்குதல்கள்

சேமிப்பு மையத்தில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதல் காரணமாக அந்தப் பகுதியில் வசிப்பவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

சரடோவ் மாகாணத்தில், ட்ரோன் தாக்குதல்களின் மூலம் பொதுமக்களின் உட்கட்டமைப்புகளைச் சேதப்படுத்தி, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சமீப காலமாக, ரஷ்யாவின் எண்ணெய் மற்றும் எரிசக்தி மையங்கள் மீது உக்ரைன் அதிகளவில் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. ரஷ்யா, உக்ரைன் மீது நடத்தி வரும் 4 ஆண்டு காலத் தாக்குதல்களுக்கு நிதியளிப்பதில் எரிசக்தித் துறையே முக்கியப் பங்காற்றி வருவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், ரஷ்யா ஆக்கிரமித்த ஐரோப்பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையமான ஸபோரிஷியா அணுமின் நிலையத்தை உக்ரைன் ட்ரோன் மூலம் தாக்கியதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. அதே போல, ரஷ்யாவின் ரோசாட்டம் அணுமின் நிலையத்திலும் உக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, உக்ரைன் வெளியிட்ட அறிக்கையில், தாங்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தைக் கடைப்பிடிப்பதாகவும், எந்த அணு உலை மற்றும் எரிசக்தி மையங்கள் மீதும் தாக்குதல் நடத்தவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

அப்படியான தாக்குதல்களின் விளைவுகளைப் பற்றி அறிந்திருப்பதாகவும் இது ரஷ்யாவின் தந்திரம் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ரஷ்யாவின் முழுமையான ஆக்கிரமிப்புக்குப் பிறகு, ஸபோரிஷியா அணுசக்திமையம் மீது தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தப்படுவது அச்சத்தை அதிகரித்துள்ளது. (3)

# இந்தியாவின் பிரம்மோஸ் ஏவுகணை இந்தோனேசியாவுக்கு விற்பனை

(டில்லி)

வியட்நாமை தொடர்ந்து, இந்தோனேசியாவுக்கும் இந்தியாவின் அதிநவீன பிரம்மோஸ் சூப்பர் சோனிக் குரூஸ் ஏவுகணைகளை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறைச் செயலர் ராஜேஷ் குமார் சிங் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற ஷாங் ரி-லா பாதுகாப்பு உச்சி மாநாட்டில் பங்கேற்ற போது அவர் இதுகுறித்து தெரிவித்துள்ளார்.

அதன்படி, 'வியட்நாம் நாட்டுடனான பிரம்மோஸ் ஏவுகணை விற்பனை ஒப்பந்தம் ஏற்கனவே கையெ [illegible] இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் பொது வெளியில் வெளியிடப்படவில்லை எனவும் இதே போல், இந்தோனேசியா நாட்டுடனான பேச்சு வார்த்தையும் சுமுகமாக முடிவடையும் நிலையில் உள்ளது எனவும் விரைவில் அந்த ஒப்பந்தமும் இறுதி செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ் சுமார் 375 மில்லியன் டொலர் மதிப்பில் பிரம்மோஸ் ஏவுகணைகளை வாங்குவதற்கு இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து, முதன் முதலாக இந்த ஏவுகணையைப் பெற்ற வெளிநாடு என்ற பெருமையைப் பெற்றது. இந்த நிலையில் தற் போது வியட்நாமைத் தொடர்ந்து இந்தோனேசியாவும் இந்த வரிசையில் இணையவுள்ளது குறிப்பிடத்தக்கது. (3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 31)

## வீட்டுக் கட்டுமானத்திற்கு பொறியியலாளர் தேவையா?




**1. அறிமுகம்: ஒரு பொதுவான மாயையும் யதார்த்தமும்**

"வீடு" என்பது வெறும் கற்களாலும் சீமெந்தினாலும் கட்டப்படும் ஒரு பொருளல்ல. அது ஒவ்வொரு மனிதனின் வாழ்நாள் கனவு, உழைப்பின் பலன், அவனது சந்ததிக்கான சொத்து. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வீட்டைக் கட்டும் போது, பலரது மனதில் எழும் ஒரு பொதுவான கேள்வி: **"வீடு என்பது ஒரு சிறிய கட்டுமானம் தானே, இதற்கு ஏன் ஒரு பொறியியலாளர் தேவை?"**

காலங்காலமாக மேசன்களை வைத்தே வீடுகள் கட்டப்பட்டு வரும் நிலையில், பொறியியலாளர் ஒருவரை வேலைக்கு அமர்த்துவது அவருக்குக் கொடுப்பனவு வழங்க வழி வகுத்து, வீணான செலவை ஏற்படுத்தும் என்ற ஒரு சிந்தனை நம் சமூகத்தில் பரவலாகக் காணப்படுகிறது.

ஆனால், இன்றைய நவீன கட்டுமான உலகில் இது ஒரு தவறான புரிதலாகும். வீட்டுக் கட்டுமானத்தில் ஒரு தகுதிவாய்ந்த பொறியியலாளரின் பங்களிப்பு இருந்தால் என்னென்ன நன்மைகள் உண்டாகும், எத்தகைய பேராபத்துகளும் நிதி இழப்புகளும் தவிர்க்கப்படலாம் என்பதை இந்த பகுதியில் விரிவாகப் பார்ப்போம்.

**2. திட்டமிடப்படாத செலவுகளும் அதன் விளைவுகளும்**

வீடு கட்டத் தொடங்கும் பலருக்கு இருக்கும் மிகப்பெரிய பொதுவான அனுபவம் - "நினைத்த பட்ஜெட்டை விட இரண்டு மடங்கு செலவாகிவிட்டது" என்பது தான்.

•தவறும் கணக்குகள்: "50 இலட்சம் ரூபாயில் வீட்டை முடித்துவிடலாம்" என்று உத்தேசமாகக் கணக்குப் போட்டுத் தொடங்கும் வீடுகள், இறுதியாக ஒரு கோடி அல்லது ஒன்றரை கோடி ரூபாய்க்குப் போய் முடிவதைக் கண் கூடாகக் காண்கிறோம்.

•சமூகப் பாதிப்புகள்: 50 இலட்சம் மட்டுமே நிதி வசதி கொண்ட ஒரு நடுத்தர வர்க்கத்து மனிதர், இந்தத் திட்டமிடல் இல்லாத கட்டுமானச் சூழலில் சிக்கிக் கொள்ளும் போது வீட்டை முடிக்க முடியாமல் பாதியிலேயே கைவிடுகிறார். அல்லது, கஷ்டப்பட்டு வட்டிக்குக் கடன் வாங்கியும், நகைகளை அடகு வைத்தும், ஏனைய பூர்வீகச் சொத்துக்களை இழந்தும் வீட்டை முடிக்கப் போராடுகிறார். இறுதியில், நிம்மதிக்காகக் கட்டிய வீட்டிற்குள் நிம்மதியின்றி வாழும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்.

முக்கிய **விதி:** வீடு கட்டும் போது ஆரம்பத்தில் மதிப்பிடும் தொகை, எதிர்பாராத காரணங்களால் (பொருட்களின் விலை ஏற்றம் போன்ற) 5% அல்லது 10% வரை வேண்டுமானால் கூடலாம். ஆனால், அது 2 மடங்கு அல்லது 3 மடங்காக மாறுவது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல.

**பொறியியலாளரின் தீர்வு:**

ஒரு தொழில்முறை பொறியியலாளர் உங்களிடம் முறையாக உரையாடி, உங்களின் தேவைகளையும், ஆசைகளையும், உங்களின் உண்மையான பொருளாதார நிலைமையையும் கேட்டறிவார். அதற்கேற்ப துல்லியமான மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட வரை படத்தைத் தயாரித்து வழங்குவார். இதனால், வீடு கட்டி முடியும் போது ஆரம்ப பட்ஜெட்டை விட 5% முதல் 10% இற்கு மேல் செலவு அதிகமாவதற்கு வாய்ப்பே இருக்காது.

**3.தேவையற்ற செலவுகளும், "அதிகப்படியான" கட்டுமானமும்**

முறையான தொழில்நுட்ப அறிவு இல்லாத போது, தேவையில்லாத இடங்களில் அதிக செலவு வைக்கும் கட்டுமான முறைகள் கையாளப்படுகின்றன. பொறியியலாளர் இல்லாத கட்டுமானங்களில் இரண்டு தீவிரமான தவறுகள் நடக்கும்: ஒன்று தேவைக்குக் குறைவாகக் கட்டுவது, மற்றொன்று தேவைக்கு மிக அதிகமாகக் கட்டுவது.

• அளவுக்கு மிஞ்சிய கொங்கிரீட்டும் கம்பிகளும்: பல இடங்களில் "வீடு பலமாக இருக்க வேண்டும்" என்ற பெயரில், தேவைக்கு அதிகமாக இரும்பு கம்பிகளைப் பயன்படுத்துவதும், தேவையற்ற அளவுப் பரிமாணத்தில் கொங்கிரீட் போடுவதும் நடைமுறையில் நடக்கிறது. இது பாது காப்பைத் தருவதில்லை, மாறாக பண விரயத்தையே தருகிறது.

• அழகைக் கெடுக்கும் தூண்கள்: உதாரணத்திற்கு, பல இடங்களில் சிறிய அளவிலான (எடுத்துக்காட்டாக 10ft x 10ft) அறைகளில்கூட பெரிய தூண்களை அமைப்பது வழக்கமாக உள்ளது. இது தேவையற்ற செலவை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், வீட்டின் உட்புற அழகையும் , இட வசதியையும் , சொகுசுத் தன்மையையும் பெருமளவில் பாதிக்கும்.

ஒரு பொறியியலாளர், மண்ணின் தன்மை மற்றும் வீட்டின் எடையைக் கணக்கிட்டு, எந்த இடத்திற்கு எவ்வளவு தேவையோ, அந்த அளவிற்கான கம்பிகளையும் கொங்கிரீட்டையும் துல்லியமாக வடிவமைப்பு செய்து பணத்தை மிச்சப்படுத்துவார்.

**4. பிழையான கட்டுமானங்கள்: எதிர்காலப் பேரழிவுகள்**

மேற்பார்வை மற்றும் பொறியியல் வழிகாட்டுதல் இல்லாத கட்டுமானங்கள், பிற்காலத்தில் வீட்டின் ஆயுளையே கேள்விக்குறியாக்கிவிடும். கள நிலவரத்தில் பின்வரும் பிழையான கட்டுமானங்கள் சாதாரணமாக நடைபெறுகின்றன:

**கட்டுமானப் பிழைகள்**

• தேவையான அளவு கம்பிகள் போடாமல் விடுதல்.

• உரிய இடங்களில் கம்பிகளை வளைக்காமல் அல்லது பொருத்தாமல் விடுதல்.

•தவறான முறையில் கம்பிகளைப் பரப்புதல்.

• தரமற்ற அல்லது குறைவான அளவு கொங்கிரீட் கலவை.

**அதனால் ஏற்படும் விளைவுகள்**

•தூண்கள் மற்றும் பீம்கள் பலவீனமடைதல்.

• நிலநடுக்கம் அல்லது அதிர்வுகளின் போது தாங்காமல் போதல்.

• கொங்கிரீட்டின் பிணைப்புத் தன்மை குறைதல்.

• கூரை மற்றும் சுவர்களில் நீர் கசிவு ஏற்படுதல்.

இத்தகைய தவறுகளால், புதிய வீடு கட்டி குடியேறிய சில வருடங்களிலேயே சுவர்களில் பெரிய விரிசல்கள், பூச்சுக்கள் உதிர்வது, கூரையிலிருந்து நீர் ஒழுகுவது போன்ற பெரும் குறைபாடுகள் தோன்றும். இவற்றை சரிசெய்ய மீண்டும் இலட்சக்கணக்கில் செலவிட வேண்டியிருக்கும். ஒரு பொறியியலாளரின் நேரடி மேற்பார்வை இத்தகைய அனைத்துப் பிழைகளையும் ஆரம்பத்திலேயே தடுத்து, வீட்டின் ஆயுளை 50 முதல் 100 ஆண்டுகள் வரை உறுதியாக வைத்திருக்க உதவும்.

**5. நியாயமான தொகையில் தரமான இல்லம்: உறவுகளி மேம்பட**

உண்மையான வெற்றிகரமான கட்டுமானம் என்பது, நியாயமான தொகையைச் செலவு செய்து, நவீன அழகியலுடன் கூடிய தரமான வீட்டை உருவாக்குவதே ஆகும்.

•மகிழ்ச்சியான சூழல்: வீடு தடையின்றி, திட்டமிட்ட பட்ஜெட்டுக்குள் தரமாக முடியும் போது, அது வீடு கட்டிய உரிமையாளருக்கும், அதனைப் பொறுப்பேற்று கட்டிக் கொடுத்த ஒப்பந்தக்காரருக்கும் இடையே ஒரு பெரும் மகிழ்ச்சியையும் திருப்தியையும் ஏற்படுத்தும்.

•நீடித்த நல்லுறவு: பல கட்டுமானங்களில் பட்ஜெட் ஏறுவதனாலும், தரக்குறைபாடுகளினாலும் உரிமையாளருக்கும் மேசனுக்கும் இடையே சண்டைகளும், நீதிமன்ற வழக்குகளும் வருவதைக் காண்கிறோம். ஆனால், ஒரு பொறியியலாளர் நடுவராக இருந்து தரத்தையும் செலவையும் கட்டுப்படுத்துவதால், இரு தரப்பினருக்கும் இடையிலான நல்லுறவு எப்போதும் உடையாமல் இருக்கும்.

எனவே, வீட்டு உரிமையாளர் அல்லது வீட்டுக் கட்டுமானத்தை மேற்கொள்பவர், ஆரம்பத்திலேயே ஒரு பொறியியலாளரை முழுமையாக ஈடுபடுத்துவது பண விரயத் தைத் தடுத்து மன அமைதியைத் தரும்.

**6. முடிவுரை: நிம்மதியான வாழ்விற்கு முறையான திட்டமிடல்**

வீடு என்பது நாம் அன்றாடம் தங்கிச் செல்லும் விடுதி அல்ல. அது சௌகரியங்கள் நிறைந்த, பாதுகாப்பான, நம் தலைமுறைகள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ வேண்டிய ஒரு தலம்.

ஆரம்பத்தில் பொறியியலாளருக்குக் கொடுக்கும் சிறிய அளவிலான கொடுப்பனவை ஒரு "செலவு" என்று பார்க்காமல், அது ஒட்டுமொத்த கட்டுமானத்தில் இலட்சக்கணக்கான ரூபாய் வீணாவதைத் தடுக்கும் ஒரு "முதலீடு" என்று புரிந்து கொள்ள வேண்டும்.

செலவுகளைக் குறைக்கக்கூடிய தொழில்நுட்ப வழிகளைக் கண்டுகொள்ளவும், கட்டுமானத்தின் தரத்தினை 100% உறுதிப்படுத்தவும், ஆரம்பத்திலேயே வேலையை முறையாகத் திட்டமிடவும் ஒரு பொறியியலாளரின் அறிவுரையும் ஆலோச னையும் மிக மிக இன்றியமையாதது. முறையான திட்டமிடலுடன் உங்கள் கனவு இல்லத்தை அமைத்து, அதில் மன நிம்மதியுடன் வாழ வாழ்த்துகிறோம்!

**இலங்கை பொறியியலாளர் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

02.06.2026
வைகாசி 19 , செவ்வாய்க்கிழமை
துதியை முன்னிரவு 6.23 மணிவரை
அமிர்த சித்தம்

மூலம் முன்னிரவு 9.40 மணிவரை
சுப நேரம் -10.22-11.52மணிவரை
இராகு காலம் -2.52-4.22மணிவரை
திருஞானசம்பந்தர் குருபூசை

சந்திராஷ்டமம்-
கார்த்திகை, ரோகினி

**வளவன்**



சுணங்கிய காரிங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.



உறவினர்கள் நண்பர்களிடையே தேவையற்ற முரண்பாடுகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் கடின முயற்சி எடுக்க வேண்டிய நாள்.



இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.



பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், செய் தொழில் மேன்மையுண்டு, தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், உடல் நலன் சீராகும்.



பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.



சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, போசன சுகமுண்டு



பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



உங்கள் வார்த்தைகளை பலரும் கேட்டு நடப்பர், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.



ஆன்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.



தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், தேவையற்ற குழப்பங்களை தவிர்ப்பது நல்லது, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.



இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்



கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும் நாள்.


**ஆயுளை நீட்டிக்க வேண்டும் என்றால் உணவைக் குறைத்துக்கொள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தரிசனம் 02

XVI

புருசோத்தமன்




2021 ஆம் ஆண்டு முதலமைச்சராக மு.க.ஸ்ராலின் பதவியேற்கும் போது

## இந்து ஆலயங்களும் அவற்றின் பரிபாலனமும்



2026 ஆம் ஆண்டு முதலமைச்சராக ஜோசப் விஜய் பதவியேற்கும் போது



சட்டசபையில் பிரபாகர்

…விஜய் நடித்த திரைப் படங்கள் எதிலும் ஜோசப் என்ற பெயருக்கு இடமிருக்கவில்லை. (நேற்றைய தொடர்ச்சி)

இங்குதான் விஜய்க்கு எதிராகப் பிரசாரம் செய்தவர்கள், அதிலும் குறிப்பாக திராவிட முன்னேற்றக்கழகம் சார்ந்த கத்தோலிக்கர்கள் சிலர், ஜோசப் விஜய் என விஜயின் பெயரை கூறத் தலைப்பட்டனர்.

இவ்வாறு ஜோசப் விஜய் எனக் கூறுவதனூடாக விஜய் ஓர் கத்தோலிக்கர் என்பதை தமிழக மக்களுக்குத் தெரியப்படுத்தி அதன் மூலம் தமிழகத்தின் அதிபெரும்பான்மையாக இருக்கக்கூடிய இந்துக்களின் வாக்குகள் நடிகர் விஜய்க்கு சேராத வண்ணம் வியூகம் அமைக்கப்பட்டது.

ஆம், தமிழக வரலாற்றில் இந்து சமயத்தவர் சார்ந்த வேறு எவரும் தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கவில்லை.

எனவே ஜோசப் விஜய் என்ற பெயரை அடிக்கடி உச்சரிப்பதன் மூலம் இந்துக்களின் மனங்களில் விஜய் சார்ந்த எதிர்ப்புணர்வை ஏற்படுத்த திமுக கடும் பிரயத்தனம் செய்தது.

எனினும் ஓர் இந்துவாக இருந்து கொண்டு; நான் ஒரு கத்தோலிக்கன் எனக் கூறுகின்ற உதயநிதி ஸ்ராலினை விட- திருச்செந்தூர் மலையில் கார்த்திகைத் தீபம் ஏற்றுவதைத் தடுத்த மு.க. ஸ்ராலினை விட, இந்துக் கோயில்களுக்குச் சென்று வழிபாடாற்றக் கூடிய ஜோசப் விஜயை தமிழகத்தின் முதலமைச்சராக்குவது தான் உத்தமம் என தமிழக மக்கள் முடிவு செய்தனர்.

ஆக, தமிழக வரலாற்றில் சனாதன தர்மத்தை ஒழிப்போம் எனக் கூறியதற்காக தமிழக மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் இருந்து இறக்கியது மட்டுமன்றி, மு.க.ஸ்ராலினை அவரின் தொகுதியில் தோற்கடித்து இனிமேலும் சனாதனம் பற்றிப் பிதற்றாதே என எச்சரிக்கை செய்து பாடம் புகட்டினர்.

### முதலமைச்சராகப் பதவியேற்ற ஜோசப் விஜய்

இதுகாறும் விஜய் எனக் அறியப்பட்ட நடிகர் விஜய் தமிழகத்தின் முதலமைச்சராகப் பதவியேற்ற போது, ஜோசப் விஜய் ஆகிய நான் என்றவாறு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

தவிர, தனது தந்தையாரின் பெயரை அவர் 'சி (C) என முதலெழுத்துக்களோடு மட்டும் முடித்துக் கொண்டார்.

உண்மையில் சந்திரசேகர் ஜோசப் விஜய் ஆகிய நான் எனக்கூறி தனது பதவியேற்பை விஜய் செய்திருந்தால், அது தமிழையும் சைவத்தையும் கனம் பண்ணுவதாக இருந்திருக்கும்.

ஆம், முத்துவேல் கருணாநிதி ஸ்ராலின் ஆகிய நான்… என்றுதான் ஸ்ராலின் கடந்த முறை பதவியேற்புச் செய்தார்.

அப்படியாயின், சந்திரசேகர் ஜோசப் விஜய் ஆகிய நான்… என்றவாறு பதவியேற்பைச் செய்திருந்தால், அதற்குள் மத சார்பற்ற பெருந்தன்மை தெரிந்திருக்கும்.

அது தவிர, சந்திரசேகர் என்பதன் முதலெழுத்து 'ச' என்பதாக இருக்க, ஆங்கிலத்தில் சந்திரசேகர் எனப்பெயர் மாற்றம் செய்து 'சி (C) எனக் குறித்துரைத்ததும் தமிழைப் புறந்தள்ளும் நடவடிக்கையோ என எண்ணத் தோன்றும்.

இதற்கு மேலாக, முதலமைச்சராகப் பதவியேற்ற விஜய், பதவியேற்பின் போதாவது தமிழ்ப் பாரம்பரிய முறையில் ஆடை அணிந்திருக்கலாம்.

ஆனால் அவர் வேட்டியைப் புறந்தள்ளி ஆங்கிலப் பண்பாட்டைப் பின்பற்றியிருந்தார்.

இவ்வாறு ஆங்கிலப் பண்பாட்டைப் பின்பற்றுவதற்கு அவர் தன்னை ஓர் கத்தோலிக்கராக முன்னிலைப்படுத்த விரும்பியதன் வெளிப்பாடோ என எண்ணுவதில் தவறிருப்பதாகத் தெரியவில்லை.

ஆம், தமிழகத்தின் முதலமைச்சர் பாரம்பரியம் என்பது கோட் சூட் உடனானதன்று.

மாறாக, தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த அத்தனை ஆண்களும் வேட்டி அணிந்தே தமது பதவியை அலங்கரித்தனர்.

எனினும் விஜய் அந்தத் தமிழ்ப் பண்பாட்டை முறியடித்த போது, அது பற்றிய விமர்சனங்கள் எழுகை பெற்றன.

ஆம், கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையில் தமிழ்ப் பண்பாட்டோடு கூடிய உடைகளை அணிந்து முதலமைச்சர் பதவியை விஜய் அலங்கரிக்க வேண்டும் என்ற தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

### சட்ட சபையின் சபாநாயகராக பிரபாகர்

ஆங்கிலக் கலாசாரம் பொருந்தியதாக கோட், சூட் அணிந்தவாறு முதலமைச்சர் பதவியை அலங்கரிக்கும் தமிழக முதலமைச்சர் விஜயின் ஆடை தொடர்பில் சர்ச்சைகளும் விமர்சனங்களும் எழுகை பெற்றிருக்கும் வேளையில், தமிழக சட்ட சபையின் சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்ட பிரபாகர் தனது உரையில் நீண்ட நேரத்தை பைபிள் தொடர்பில் உரையாற்றுவதற்கு எடுத்துக் கொண்டார்.

இதற்கும் அப்பால், தான் ஐயாயிரம் பைபிள்களை இலவசமாக விநியோகித்தது பற்றியும் சட்ட சபையின் உயரிய ஆசனத்தில் அமர்ந்திருந்து கூற, அதனை முதலமைச்சர் விஜய் உன்னிப்பாகக் கேட்டிருந்தார் என்பது சைவ மக்களிடையே பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதை நாம் கூறும் போது சபாநாயகர் என்பதற்காக பைபிள் பற்றிப் பிரபாகர் பேசக் கூடாதா என யாரேனும் கேட்கலாம். இங்கு தான் பிரபாகர் சபாநாயகர் எனும் ஆசனத்தில் இருந்து கொண்டு பைபிளைப் பேசுவது பொருத்தமன்று.

ஏனெனில் தமிழகம் சைவத் திருநாடு. உலகப் புகழ்பெற்ற சிவாலயங்களை அமைத்த மாமன்னர்கள் ஆண்ட தென்னாடு, சிவன் உறையும் பூமி.

அந்த மண்ணின் ஆட்சிப் பீடத்தில் இருந்து கொண்டு தான் சார்ந்த சமயத்திற்குப் பிரசாரம் செய்வது போல சபாநாயகர் பிரபாகர் ஆற்றிய உரை எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

இதை நாம் கூறும் போது சபாநாயகர் என்ற உயரிய ஆசனத்தில் சைவ சமயத்தவர் ஒருவர் அமர்ந்திருந்து கொண்டு; பெரிய புராணம் பற்றியோ கந்தபுராணம் பற்றியோ பேசுவாராயின் அதுவும் பொருத்தமன்று என்பதே நம் வாதம்.

(நாளை தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 1056





அந்த நட்சத்திரத்தின் ஒரு முனையில் சுமார் ஒரு அடி நீளம் வெளிறிய புகைத் திரள் போல நீண்டிருந்தது. பத்து நாளைக்கு முன்புகூட வானத்தின் ஒரு கோணம் முழுதும் நீண்டிருந்த வால் இப்படிக் குறுகிவிட்ட காரணம் என்ன?.

வானத்திலிருந்து பார்வையை அகற்றிச் சுற்று முற்றும் பார்த்தார். நரிகள் இன்னும் போகவில்லையென்பதைக் கண்டார்! பத்து, இருபது, ஐம்பது நரிகள் இருக்கும். அவற்றின் கண்கள் நெருப்புத் தணல்களைப்போல் காட்டின் இருளில் ஜொலித்துக் கொண்டிருந்தன. கிழவன் எப்போது சாகப் போகிறான் என்று காத்துக் கொண்டிருந்தன போலும்! போகட்டும்! போகட்டும்! அவ்வளவு மரியாதை பழுவேட்டரையனிடம் இந்த நரிகள் காட்டுகின்றனவே!

திடீரென்று வானமும் பூமியும் அந்த வனப்பிரதேசம் முழுவதும் ஒளி மயமாயின. பழுவேட்டரையரின் கண்கள் கூசின. அது மின்னல் அல்ல, வேறு என்னவாயிருக்கக் கூடும்? வானத்தை நோக்கினார். ஜாஜ்வல்யமாகப் பிரகாசித்த ஒரு தீப்பந்தம் வான வட்டத்திலே ஒரு கோணத்தில் பிரயாணம் செய்து கொண்டிருக்கக் கண்டார்.

அதன் பிரகாசம் அவருடைய கண்களைக் கூசச் செய்தது. கண்ணை ஒரு கணம் மூடிவிட்டுத் திறந்து பார்த்தார். அந்தத் தீப்பந்தம் சிறிதாகிப் போயிருந்தது. வர வர ஒளி குறைந்து வந்தது. திடீரென்று அது மறைந்தேவிட்டது. பழையபடி இருள் சூழ்ந்தது.

இந்த அதிசயம் என்னவாயிருக்கும் என்று பழுவேட்டரையர் சிந்தித்துக் கொண்டே மீண்டும் வானத்தை நோக்கினார். குறுகிய தூமகேது சற்றுமுன் இருந்த இடத்தைப் பார்த்தார். அங்கே அதைக் காணவில்லை. ஆகா! தூமகேதுதான் விழுந்து விட்டது! இதன் கருத்து என்ன? இதன் விளைவு என்ன? உலகத்தில் ஏதேனும் விபரீதம் நடக்கப் போவதற்கு அறிகுறிதான். ராஜகுடும்பத்தினர் யாருக்காவது விபத்து நேரிடுவதற்கு அடையாளம். வால் நட்சத்திரம் மறையும் போது அரச குலத்தைச் சேர்ந்த யாரேனும் மரணம் அடைவார்கள். இது வெகுகாலமாக மக்களிடையே பரவியிருக்கும் நம்பிக்கை. அப்படியெல்லாம் கிடையாது என்று சொல்லுவோரும் உண்டு. அதன் உண்மையும் பொய்மையும் நாளைக்குத் தெரிந்து விடும். நாளைக்கா? இல்லை! இன்றைக்கே தெரிந்து போய் விடும்! அதோ கீழ் வானம் வெளுத்துவிட்டது! பொழுது புலரப் போகிறது! இன்று இரவுக்குள் மூன்று இடங்களில் மூன்று விபரீத பயங்கர நிகழ்ச்சிகள் நடைபெறக் கூடும். அவை நடக்கப்போகும் விவரம் நமக்கு மட்டும் தெரியும். அவற்றைத் தடுக்கும் சக்தியும் நமக்குத்தான் உண்டு. தடுப்பதில் வெற்றி பெற்றால் தூமகேது விழுந்த அபசகுனத்தைக்கூட வெற்றி கொண்டதாகும். இல்லாவிடில் அதைப் பற்றி எண்ணவே பழுவேட்டரையரால் முடியவில்லை. தடுத்தேயாக வேண்டும்! சோழர் குலத்தைச் சேர்ந்த மூவரையும் காப்பாற்றியேயாக வேண்டும்.


தமது முதல் கடமை மிக முக்கியமான கடமை ஆதித்த கரிகாலனைக் காப்பாற்றுவதுதான்!

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஆலமரமும் வெளவால்களும்



அந்தப் பழந்தின்னி வெளவால்கள் ஒரு பாழடைந்த மண்டபத்தில் வசித்து வந்தன. கோடைகாலத்தில் அவைகள் வசித்து வந்த அந்தக் கட்டிடத்தில் வெப்பம் அதிகமாகக் கனன்றது!.. குளிர் காலத்திலோ அதிகக் குளிராக இருந்தது!

இதனால் மிதமான சீதோஷ்ணநிலை கொண்ட வேறு ஒரு இடத்திற்கு இடம் பெயர்ந்து செல்ல அந்த வெளவால்கள் எண்ணின. அதுவுமல்லாமல் மண்டபத்தின் மற்றொரு பகுதியில் பூச்சி தின்னும் அந்த வெளவால்கள் வசித்து வந்தன. அவைகள் இந்த பழந்தின்னி வெளவால்களைச் சீண்டிக் கொண்டேயிருந்தன. [illegible] குறைவான இவைகள் ஒரு அதிகாலைப் பொழுதில் வேற்றிடம் தேடிக் கூட்டமாகப் பறக்கத் தொடங்கின.

அது மார்ச் மாதம். இளவேனிற் காலப்பருவம். ஒரு நீர்நிலைப் பிரதேசத்தின் அருகில் ஆலமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தில் ஏராளமாய் ஆலம்பழங்கள் காய்த்துக் கிடந்தன. பச்சைப் பசேலென்ற இலைகளும், கொத்துக் கொத்தாய் சிவந்த நிறப் பழங்களுமாய் அந்த மரம் பார்ப்பதற்கு மிக அழகாகக் காட்சியளித்தது. நூறாண்டுகள் கண்ட விருட்சம் அது! நீளமான விழுதுகள் தாய் மரத்தைத் தாங்கிக் கொண்டிருந்தன. தன்னில் காய்த்துக் கிடக்கும் இந்தப் பழங்களை உண்ண ஏதேனும் பறவைகள் வந்தால் நல்லது என அந்த ஆலமரம் எண்ணிக் கொண்டிருந்தது.

வேற்றிடம் தேடிச் சென்று கொண்டிருந்த அந்த வெளவால்கள் ஆலமரத்தைப் பார்த்தன. அதன் கிளைகளில் கொத்துக்கொத்தாய் காய்த்த கனிகள் அவைகளின் கவனத்தை ஈர்த்தன. பழந்தின்னி வெளவால்களுக்கு ஆலம்பழங்கள் என்றால் கொள்ளைப் பிரியம்! அவைகள் கூட்டமாக அந்த மரத்தில் வந்தமர்ந்தன. நீண்ட தூரம் பறந்து வந்த களைப்புத் தீர பழங்களைக் கொறித்து பசியாறின.

அவைகள் ஆலமரத்திடம், "இத்தனை நாளா இந்த இடத்துல இப்படி ஒரு மரம் இருக்குறது எங்களுக்குத் தெரியாமப் போச்சு! நாங்க இங்க தங்கிக்கலாமா?" என்று கேட்டன.

"உங்களை மாதிரி உயிரினங்கள் வந்து தங்குவதற்காகத்தான் நான் விருட்சமா வளர்ந்து நிற்கிறேன்! தாராளமாக தங்கிக்கலாம்!" என்றது ஆலமரம். அந்த ஆலமரத்தில் ஆந்தை ஒன்று வசித்து வந்தது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வலிமையும் வீரமும் மிக்கவர்களின் ஆயுதம் அகிம்சை. - மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் இந்தியத் தூதுவரிடம்...

யாழ்ப்பாணத்திற்கு இன்று வருகைதரும் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா அவர்களை வரவேற்பதில் மகிழ்வடைகின்றோம்.

இந்தியத் தூதுவரின் யாழ்ப்பாண வருகை என்பது பல வழிகளிலும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இன்னமும் தீர்க்கப்படாத ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடக்கம் எங்கள் கடற்பரப்பில் அத்துமீறி நுழைகின்ற இந்திய மீனவர்கள் ஈறாக, பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வை எட்டுவதற்கு இந்தியாவின் ஆசியும் ஆதரவும் மிகவும் அவசியமானது.

அதிலும் குறிப்பாக, தற்போது யாழ்ப்பாணத்தில் பேசுபொருளாக இருக்கின்ற யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையம் தொடர்பில் ஒரு சரியான தீர்மானத்தை எடுத்து அதனை நடைமுறைப்படுத்துகின்ற தார்மீகப் பொறுப்பும் இந்திய மத்திய அரசின் சார்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கு உண்டு.

அந்தவகையில் யாழ்ப்பாண மக்களுக்கு இந்திய மத்திய அரசு அமைத்துத் தந்த திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தின் பொருட்டு யாழ்ப்பாண மக்கள் மீண்டும் மீண்டும் இந்தியாவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

அதேநேரம், யாழ்ப்பாண மக்களுக்காக அமைக்கப்பட்ட திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தை சுதந்திரமாக இயக்குகின்ற அதிகாரம் யாழ்ப்பாண மக்களிடமே இருக்க வேண்டும்.

ஆம், யாழ்ப்பாண மக்களுக்காக யாழ்ப்பாண மண்ணில் இந்தியா அமைத்துத் தந்த பண்பாட்டு மையத்தை - அதன் நிர்வாகத்தை பௌத்த சாசன அமைச்சிடம் ஒப்படைப்பதென்பது எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

எனவே, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்திற்கான ஆளுகைச் சபையொன்றை யாழ்ப்பாண மக்களைக் கொண்டு அமைத்து, அந்த ஆளுகைச் சபையூடாக பண்பாட்டு மையத்தை இயக்குவதுதான் நியாயத்துவமானது.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய சமயத் தலைவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், யாழ்ப்பாண இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதிநிதி மற்றும் யாழ்ப்பாண மாநகரசபையின் ஆணையாளர் இன்னும் தகைசார் பேராசியர்களைக் கொண்ட ஓர் ஆளுகைச்சபையை மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நியமித்து அச் சபையினூடாக திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தை இயக்குவதே பொருத்துடையது.

எனவே இதற்கான ஏற்பாட்டை இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற இந்தியத் தூதுவர் செய்துதர வேண்டும் என்பதே நம் தாழ்மையான கோரிக்கை.

எங்களின் இந்தக் கோரிக்கையை இந்தியத் தூதுவர் நடுநிலை நின்று பரிசீலிப்பார் என்பதில் எமக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

மேலும் இது விடயத்தில் இந்தியா ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கத் தவறுமாயின், இலங்கைக்கு சுதந்திரம் வழங்கிய பிரித்தானியா எங்ஙனம் இலங்கைத் தமிழ் மக்களைப் பற்றி சிந்திக்காமல் விட்டதன் விபரீதங்களை இன்றுவரை அனுபவிக்கின்ற தமிழ் மக்களுக்கு இந்தியாவும் இன்னொரு சிக்கலை தானமாகத் தந்துவிடலாகாது.

# ரூ. 10 கோடிக்கும் மேற்பட்ட பணத்துடன் வவுனியாவில் வர்த்தகர் தலைமறைவு

## குற்றப்புலனாய்வு பொலிஸில் முறைப்பாடு

(வவுனியா)

வவுனியாவில் ரூ.10 கோடிக்கும் மேற்பட்ட பணத்துடன் வர்த்தகர் ஒருவர் குடும்பத்துடன் தலைமறைவாகியுள்ளதாக கொழும்புக் குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் நகைக் கடை நடத்தி வந்த வர்த்தகரே 10 கோடி ரூபாய்க்கும்மேற்பட்ட பணத்தை பல வர்த்தகரிடம் கடனாகப்பெற்றுக் கொண்டு குடும்பத்துடன் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட நகைக் கடை உரிமையாளர் ஒருவர் கொழும்புக் குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த நபர் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக வவுனியாவில் பல நகைக்கடைகளுக்கு நகைகளை விநியோகம் செய்து வந்ததுடன், நகைக் கடைகளுடன் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்திருந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். *(ம-7,250)*

# சுரேஷ் சலேயின் தடுப்புக்காவல் மேலும் 90 நாட்களுக்கு நீடிப்பு

(கொழும்பு)

அரசப் புலனாய்வு சேவையின் முன்னாள் தலைவரான ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சலேயை, மேலும் 90நாட்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவின் கீழ் தடுப்புக்காவலில் வைப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2026 மே 27 ஆம் திகதியிட்ட MOD/LEG/PTA/21/2026 என்ற தடுப்புக் காவல் உத்தரவைப் பிறப்பித்த ஜனாதிபதி, 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 9(1)-இன் படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரியென சட்டமா அதிபர் திணைக்களததால் குற்றம் சாட்டப்பட்டுள்ள சுரேஷ் சலே பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்த முன் அறிவுடன், இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க சதித்திட்டம் தீட்டியதாகவும் பொது அமைதி மற்றும் தேசியப் பாதுகாப்புக்கு ஆபத்தை விளைவித்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி பேலியகொடவில் கைது செய்யப்பட்ட சுரேஷ் சலே, ஏற்கெனவே சுமார் 80 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதோடு குறித்த வழக்கில் அவரை 3ஆவது சந்தேக நபராகப் பெயரிட சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. *(ம-7)*

# கொள்கலன் போக்குவரத்து கட்டணம் அதிகரிப்பு

இலங்கையில் டீசல் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, உள்நாட்டுப் பொருட்களின் விநியோகம் மற்றும் இறக்குமதி-ஏற்றுமதித் துறையில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், கொள்கலன் போக்குவரத்துச் சேவைக் கட்டணங்கள் நேற்று (01) திங்கட்கிழமை முதல் 5 சதவீதத்தால் (5%) உயர்த்தப்பட்டுள்ளன.

அகில இலங்கை கொள்கலன் போக்குவரத்து வாகன உரிமையாளர்கள் சங்கம் இந்தத் திடீர் கட்டண உயர்வை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் (31) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசல் விலையை அதிரடியாக உயர்த்தியிருந்தது.

லங்கா ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாயினாலும் சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 20 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டது.

கொள்கலன் போக்குவரத்து வாகனங்கள் முழுமையாக டீசல் எரிபொருளிலேயே இயங்குவதால், இந்த விலை உயர்வு தங்களின் தினசரி இயக்கச் செலவைப் பெருமளவு அதிகரித்துள்ளதாக போக்குவரத்து உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். *(ம-7)*

# 100 சமுர்த்தி ஆரோக்கிய உணவு மையங்களை நிறுவ அரசு திட்டம்

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில், இந்த ஆண்டில் 100 'சமுர்த்தி ஆரோக்கியமான உணவு' மையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த விடயத்தினை கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் உபாலி பன்னில தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதாக அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

இத்திட்டம் குறித்து கருத்துரைத்த உபாலி பன்னில, இந்தத் திட்டமானது கிராமப்புற வறுமை ஒழிப்பு மற்றும் சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கு ஆதரவளிப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழுள்ள 51ஆவது சமுர்த்தி ஆரோக்கியமான உணவு மையம் அண்மையில் மாத்தளை மாவட்டத்தில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டிற்குள் நிர்ணயிக்கப்பட்ட 100 நிலையங்கள் என்ற இலக்கை அடைவதற்காக ஏனையமையங்களை அமைக்கும் பணிகள் திட்டமிட்டபடி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது" என தெரிவித்துள்ளார். *(ம-7)*

# நிலக்கரி இறக்குமதி நட்டத்தை ஈடு செய்வதற்கே எரிபொருள் விலை அதிகரிப்பு - நாமல் எம்பி

(கொழும்பு)

தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதால் ஏற்பட்டுள்ள நட்டத்தை ஈடுசெய்யவும் அதற்குப் பதிலாக மின் உற்பத்திக்காக அதிகளவில் எரிபொருளைப்பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ள [illegible] தியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நுகேகொடையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே [illegible] குறிப் [illegible].

மேலும் அவர் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் அரசுகள் எரிபொருள் விலையை உயர்த்தும்போது அமைச்சர்களுக்குத் தரகுப் பணம் சென்றதாகக் கூறப்பட்டது. ஆனால் இன்று எரிபொருள் விலை உயர்த்தப்பட்டதற்கான முக்கிய காரணம் தரமற்ற நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டமையாகும்.

இதனால் ஏற்பட்டுள்ள பெரும் நட்டத்துக்கு மத்தியில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காக நாளொன்றுக்கு பல இலட்சம் லீற்றர் எரிபொருளை மேலதிகமாக எரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார். *(ம-7)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சி பலன்கள்

## 26.05.2026 முதல் 13.06.2027 வரை



**மதிப்பும் மரியாதையும் கொண்ட துலாம் இராசி வாசகர்களே!**

உங்கள் இராசிக்கு 9ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு பகவான் 26.5. 2026 அன்று, 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு வருகிறார். 10இல் வரும் குருவால் பதவி மாற்றங்கள் உருவாகும். செய்யும் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். இருப்பினும் மன பயமும், மற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்ற கவலையும் அதிகரிக்கும். பணப்புழக்கம் நன்றாக்வே இருக்கும்.

## பணிவும் துணிவும் நன்மை தரும்!

**ஜோதிடக் கலாமணி சிவஸ்ரீ சிங்காரம்**

### குரு இருக்கும் இடத்தின் பலன்

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியான குரு பகவான், 10 ஆம் இடத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கப்போகிறார். 10 இல் குரு வந்தால் பதவி மாற்றம் உண்டு என்பது பழமொழி. எனவே, இருக்கும் இடத்தில் இருந்து இடமாற்றங்களோ, தொழில் மாற்றங்களோ ஏற்பட வாய்ப்புண்டு. பெற்றோரின் உடல் நலத்தில் கவனம் தேவை. எதையும் திட்டமிட்டு செய்ய முடியாமல் போகலாம். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக்கொள்ள அதிக செலவிடும் சூழல் உண்டு.

### வெற்றி தரும் குரு பார்வை

சுப கிரகமான குரு பகவான், தன் பார்வை பலத்தால் எதிர்பாராத நல்ல திருப்பங்களைக் கொடுக்கப்போகிறார். உங்கள் இராசிக்கு 2, 4, 6 ஆகிய மூன்று இடங்களையும் குரு பார்க்கப் போகிறார். 2 ஆம் இடம் எனப்படும் குடும்ப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் குடும்பத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். கொடுக்கல்-வாங்கல் திருப்தியாக இருக்கும். முக்கியப் புள்ளிகளின் ஒத்துழைப்பால் புது முயற்சிகள் வெற்றி பெறும். வீடு கட்டுவது அல்லது வாங்குவது பற்றிய சிந்தனை ஏற்படும். பணப் புழக்கம் அதிகரிக்கும் அதேநேரம், மனக்குழப்பமும் அதிகமாகும்.

குருவின் பார்வை 4ஆம் இடத்தில் பதிவதால் சுக ஸ்தானம் பலம் பெறுகிறது. உடல்நலம் சீராகி பம்பரமாக சுழன்று பணிபுரியும் வாய்ப்பு கிடைக்கும். நண்பர்கள் நல்ல தகவல் களைத் தருவர்.

பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சி இப்போது பலன் தரும். படிப்புக்கேற்ற வேலை கிடைத்து உதிரி வருமானம் உண்டு.எதிர் நீச்சலால் கிடைத்த வெற்றி இனி இயல்பாகவே கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர் விடும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும்.

6ஆம் இடத்தை குரு பகவான் பார்ப்பதால், கடன் சுமை குறைய வழி பிறக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். நீங்கள் தேர்ந்தெடுத்த களம் எதுவாக இருந்தாலும் அதில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த பங்குதாரர்கள் விலகுவர். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாட்களாக நடைபெற்ற வழக்குகள் இப்போது சாதகமாக முடியும். மாற்று மருத்துவம் உடல்நலத்தை சீராக்கும். பகையான உறவினர்கள் உறவாக மாறுவர். மன பயம் அகலும். புதிய வேலை வாய்ப்பு கிடைத்து, அதன் மூலம் பொருளாதார நிலை உயரும்.

### நட்சத்திர பாதசாரப்படி பலன்கள்

26.05.2026 முதல் 10.06. 2026 வரை புனர்பூச நட்சத்திரக் காலில் தன் சுய சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் போது, இன்பங்கள் இல்லம் தேடி வரும். துன்பங்கள் துள்ளி ஓடும். தடைப்பட்ட முயற்சிகள் இனி தானாக நடைபெற்று வெற்றியைத் தரும். கடை திறப்புவிழா, கட்டிட திறப்பு விழா போன்றவற்றில் கவனம் செலுத்துவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகள் கேட்ட சலுகைகளையும் வழங்குவர்.

வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கும். அரசு வழியில் வேலை கைகூடும். அரசியல் களத்தில் முக்கிய பொறுப்புகள் கிடைக்கும். 11.6.2026 முதல் 10.8.2026 வரை பூசம் நட்சத் திரக் காலில் சனி சாரத்தில் குருபகவான் சஞ்சரிக்கும் போது, இடமாற்றம் ஏற்றம் தரும். உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. சுக ஸ்தானம் மற்றும் பூர்வ புண்ணிய ஸ்தானத்திற்கு அதிபதியான அவரது சாரத்தில் குரு வரும்போது தீர்த்தயாத்திரையும், தெய்வ தரிசன மும் அதிகரிக்கும். மனமாற்றம் மகிழ்ச்சி தரும். பூமி, புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சேமிப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தில் பல சலுகைகள் கிடைக்கும்.

11.8.2026 முதல் 19.10.2026 வரை மற்றும் 13.2.2027 முதல் 12.06.2027 வரை ஆயில்யம் நட்சத்திரக் காலில் புதன் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும்போது, பெற்றோர் வழி பிரச்சினை அகலும். முன்னோர் சொத் துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பணியாளர்கள் பக்குவமாக நடந்து கொள்வர். குல தெய்வ பிரார்த்தனைகளில் கவனம் செலுத்தும் நேரம் இது. கேட்ட இடத்திற்கு பணி மாற்றம் கிடைக்கும். புனித பயணங்களும், புகழ்பெற்ற ஆலய வழிபாடும் செய்வீர்கள். 20.10. 2026 முதல் 12.02.2027 வரை மகம் நட்சத்திரக் காலில் குருபகவான் கேது சாரத்தில் சஞ்சரிக்கும் போது, சிம்மத்தில் இருந்து பார்க்கும் குருவால் உங்கள் இராசிக்கு 3, 5, 7 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன. முன்னேற்றம் தரும் இடம் மூன்றாம் இடம் என்ப தால், மற்றவர்கள் பார்த்து பொறாமைப்படும் வகையில் உங்கள் முன்னேற்றம் இருக்கும். உடன்பிறப்புகள் உறுதுணையாக இருப்பர்.




திடமான நம்பிக்கையோடு செயற்படுவீர்கள். பொருளாதார பற்றாக்குறை அகலும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தம்பதியர்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடு அகலும். புத்திர பாக்கியம் கிடைக்கும் சூழ்நிலை அமையும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும்.

### இராகு - கேது பெயர்ச்சிக் காலம்

13.11.2026 அன்று ராகு - கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. மகர இராகுவும், கடக கேதுவும் எதிர்பாராத நல்ல திருப்பங்களை வழங்கப் போகிறார்கள். அதேநேரம் அர்த்தாஷ்டம ராகு என்பதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திடீரென இடமாற்றங்கள் வருவதற்கான சூழல் உண்டு.

வெளிநாட்டில் இருந்து சொந்த ஊர் திரும்ப முடி யாதவர்களுக்கு, இப்போது நிலைமை சரியாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள், "பணியில் நீடிக்கலாமா, விலகலாமா?" என்ற யோசனையில், ஒரு தெளிவான முடிவை எட்டுவீர்கள்.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு

வெள்ளிக்கிழமைதோறும் விரதம் இருந்து அஷ்டலட்சுமி கவசம் பாடி லட்சுமியை வழிபடுவது நல்லது. சிறப்பு வழிபாடாக யோக பலம் பெற்ற நாளில் தஞ்சாவூர் அருகில் உள்ள தென்குடி திட்டை சென்று அங்குள்ள ராஜகுருவை வழிபட்டு வந்தால் ராஜயோகம் வந்துசேரும்.

### பெண்களுக்கான பலன்கள்

பத்தாம் இடத்திற்கு குரு வருவதால் பணிபுரியும் இடத்தில் கவனம் தேவை. வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வீடு மாற்றம் நன்மை தரும். உத்தியோகத்தில் திருப்தி ஏற்படாது. கணவன் மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் விருப்பங்கள் நிறைவேறும். தாய் மற்றும் உடன் பிறப்புக்களின் ஆதரவு இருந்தாலும், மனவருத்தம் அதிகரிக்கும். நேர் மறை சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். பிள்ளைகளை உங் கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. வருமானம் திருப்திகரமாக இருந்தாலும், விரயங்கள் கூடுதலாகவே இருக்கும்.

### குருவின் வக்கிர காலம்

கடகம் மற்றும் சிம்மம் ஆகிய இராசிகளில் குரு பகவான் வக்ரம் பெறும் போது, நல்லதே நடக்கும். உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜ யோகம்" என்பதற்கேற்ப, எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படப் போகிறது. அதன் விளைவாக உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அரசு வேலைக்கு முயற்சித்தவர்களுக்கு அதுவும் கைகூடும். வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்.பல்கலையில்...

நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

வெசாக் பௌர்ணமி பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்களினால் பல்கலைக்கழக வளாகத்தினுள் வெசாக் கூடுகள் அமைக்கப்பட்டு, மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அலங்கரிக்கப்பட்டிருந்த வெசாக் கூடுகளே நேற்று முன்தினம் (31) ஞாயிற்றுக்கிழமை இரவு இனந்தெரியாதோரால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்களினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் வழங்கிய முறைப்பாட்டையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் தடயங்களைச் சேகரித்துள்ளதுடன், வெசாக் கூடுகளைச் சேதப்படுத்திய நபர்களைக் கண்டறிவதற்காகத் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

## யாழில் காணாமல்...

ஐந்தாவது நாளாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

கடற்படையின் படகுகள் மற்றும் கடற்றொழிலாளர்களின் படகுகள் இணைந்து தேடுதலில் ஈடுபட்டுள்ளன.

இதன்போது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் மற்றும் இரண்டு குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் மொத்தமாக நால்வர் கடந்த 27ஆம் திகதி இரவு 12 மணிக்கு தொழிலுக்காகச் கடலுக்குச் சென்றுள்ளனர்.

இவர்கள் நால்வரும் இதுவரை வீடு திரும்பாத நிலையில், பல்வேறு வழிகளில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்கு கடற்படையினரின் உதவியும் கோரப்பட்டுள்ள நிலையில், கடற்றொழிலாளர்கள் தமது உறவுகளை எதிர்பார்த்தவாறு காத்திருக்கின்றனர்.

இவர்களில் முனைப் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவரும் கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் மூவரும் உள்ளடங்குகின்றனர். (ம-7)

## வெசாக்கை...

மொத்த விபத்துக்களில் கடந்த 2 நாட்களில், 19 வீதி விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றில், 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

இக்காலப்பகுதியில் 29 கடுமையான விபத்துக்களும் 96 சிறிய விபத்துக்களும் 19 சேத விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த வீதி விபத்துக்களுடன் தொடர்புடைய வாகனங்களில் உந்துருளிகளே அதிகளவில் விபத்துக்குள்ளாகியுள்ளன.

மோட்டார் சைக்கிள்கள் 15, முச்சக்கரவண்டிகள் 03, பாரவூர்திகள் 02, தனியார் பேருந்துகள் 02, கெப் ரக வாகனங்கள் 01 என்பன விபத்துக்குள்ளாகியுள்ளன.

உயிரிழந்த 24 பேரில் அதிகளவானோர் வீதியில் நடந்து சென்ற பாதசாரிகள் என்பது விசேட அம்சமாகும்.

இவ்வாறு விபத்தில் உயிரிழந்தவர்களில் பாதசாரிகள் (நடந்து சென்றவர்கள்) 13 பேர், உந்துருளி ஓட்டுநர்கள் 07 பேர், உந்துருளியின் பின் ஆசனத்தில் பயணித்த பயணிகள் 01, மிதிவண்டி (சைக்கிள்) ஓட்டுநர் 01 நபர், வாகன ஓட்டுநர்கள் 01, வாகனப் பயணிகள் 01 ஆவர்.

பண்டிகைக் காலங்களில் வாகனங்களைச் செலுத்தும்போதும், வீதிகளில் பயணிக்கும்போதும் பொதுமக்கள் மற்றும் ஓட்டுநர்கள் அதிக அவதானத்துடனும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வலியுறுத்தினார். (ம-7)

## அச்சுவேலியில்...

உடல் நலக் குறைவால் உயிரிழந்துள்ளார்.

வளலாய் மேற்கு, அச்சுவேலியைச் சேர்ந்த முருகன் [illegible] (வயது-[illegible]) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இடைக்காடு மகாவித்தியாலயத்தில் சமையலாளியாகப் பணிபுரியும் அவர் கடந்த 17ஆம் திகதி சமையல் பொருட்கள் வாங்குவதற்காக துவிச்சக்கர வண்டியில் அச்சுவேலியில் இருந்து சந்நிதி கோவிற் பக்கமாகச் சென்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் துவிச்சக்கரவண்டியை மோதியதில் அவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று 21ஆம் திகதி வீடு திரும்பியுள்ளார்.

25ஆம் திகதி உடல்நலக் குறைவு காரணமாக தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (31) பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## அநு...

அநுராதபுரத்தில் மதகுரு ஒருவரால் சிறுமியொருவர் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சமூக ஆர்வலர்கள், மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

நாட்டில் சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகள் அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்ட போராட்டக்காரர்கள், குற்றவாளிகளுக்கு தராதரம் பாராமல் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினர்.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது 'பிக்குவே உனக்கு பிணை ஒரு கேடா, காவி உடைக்கும் சட்டம் வேண்டும், தனி நீதிமன்றம் தப்பிக்கும் நாடகமா'' போன்ற வாசகங்கள் தாங்கப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர். முன்னதாக குறித்த சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான கையெழுத்துக்களும் பெறப்பட்டிருந்தது. (ம-7,250)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2026.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 6205
C 4 1 3 7 1 6
அத சம்பத C 3 7 1 6
சீட்டிழுப்பு இலக்கம் 780

சுப தவசக்
திகதி 2026.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 0321
இடபம் 01 44 55
7409

தன நிதானய
திகதி - 2026.06.01
சீட்டிழுப்பு இலக்கம் - 2235
A 52 63 69 73 A

மெகா பவர்
திகதி 01/06/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2553
X 12 11 45 46 80

ஜய
திகதி 2026.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 0473
F 5 1 1 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4447
சீட்டிழுப்பு திகதி 01.06.2026
U 01 10 55 77
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.06.01
சீட்டிழுப்பு இலக்கம் 1514
கடகம் 20 43 54 56 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பால் சம்பத்
01.06.2026 வெற்றி வாரம் 0913
S 1 8 3 9 8 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,277,577.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3179
25000 பணப் பரிசு 93436
சீட்டிழுப்பு திகதி 2026.06.01 தினம் திங்கட்கிழமை
34 43 49 74 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 130,188,346.40

சனிதா
திகதி 01.06.2026 வெற்றி வாரம் 5340
10 25 35 51 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,881,130.00
ரூ. 50,000/- பணப்பரிசு 54183

சசிரி
வெற்றி வாரம் 1009
சீட்டிழுப்பு திகதி 01.06.2026
திங்கட்கிழமை
03 33 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,845,720.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4891
சீட்டிழுப்பு திகதி 01.06.2026 தினம் திங்கட்கிழமை
07 40 41 44 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

தப்ரக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 31 14 22 26 55
2355
01.06.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.281,339,001.20

அட கோடீபதி
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 3005
சீட்டிழுப்பு திகதி : 2026.06.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,062,745.60
11 30 48 75 Y

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பிரான்ஸ்...

கடந்த சனிக்கிழமை மதியம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வைத்தியலிங்கம் புவனேஸ்வரன்(வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

பொபிங்னியின் 'ரூ ஹெக்டர் பெர்லியோஸ்' வீதியில் அமைந்துள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில், அண்டை வீட்டாருக்கு இடையிலான முறுகல் நிலை காரணமாக பொலிஸாருக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் வருவதற்கு முன்னதாகவே, குறித்த நபர் தனது அண்டை வீட்டார் இருவரைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியுள்ளார்.

இதில் ஒருவருக்குத் தோள் பட்டைப் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. மதியம் 2:00 மணியளவில் சம்பவ இடத்திற்கு விரைந்த குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மின்தூக்கி மூலம் 6 வது மாடிக்குச் சென்று கதவு திறந்த கணமே, இரு கைகளிலும் கத்திகளை ஏந்தியிருந்த அந்த நபர் பொலிஸாரை நோக்கிப் பாய்ந்துள்ளார்.

மின்தூக்கிக்குள் இருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர், அவரை தடுத்துப் பின்னுக்குத் தள்ள முயன்றபோதும், அவர் தொடர்ந்தும் வெறித்தனமாகத் தாக்க முற்பட்டுள்ளார். இந்த விபரீத சூழலில், தங்களது உயிரைப் பாதுகாக்கும் நோக்கில் பொலிஸ் அதிகாரி தனது துப்பாக்கியால் இரண்டு முறை சுட்டுள்ளார். இதில் இடுப்பு மற்றும் நெஞ்சுப் பகுதியில் குண்டு பாய்ந்து அவர் படுகாயமடைந்துள்ளார்.

அவசர மருத்துவ உதவிப் பிரிவினர் சம்பவ இடத் திற்கு விரைந்து சிகிச்சை அளி த்த போதிலும், சில நிமிட ங்க ளில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)


**வேலையாட்கள் தேவை**

மின்சார இணைப்பு, பைப் லைனிங், பெயின்ரிங், மேசன், லேபர் வேலையாட்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

070 783 4296 (2380)

Whatsapp இலும் தொடர்பு கொள்ளலாம்.



**உளமார வாழ்த்துகின்றோம்**

21 ஆம் ஆண்டு அகவை பூர்த்தியாகி
22 ஆம் அகவையில் காலடி பதிக்கும்
யாழ். மின்சார நிலைய வீதி,

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**

(உரிமையாளர் – என்.நித்தியானந்தன், நி.அருண்)
021 222 6953, 077 722 5310, 077 4905792

அவர்களை சிறப்புற உளமாற வாழ்த்துகின்றோம். இன்று போல் என்றும் எல்லோரும்போற்றிட, நல்லோர் வாழ்த்திட, நல்லதே செய்து நன்றே நிகழ்ந்திட, நல் வாழ்த்துக்கள்!



வாழ்த்துபவர் : திரு.இ.ஸ்ரீதரன்,
வேணுகா ரவல்ஸ், நாச்சிமார் கோவிலடி. (7731)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-5766)

076 825 7716 (ஆகாஸ்)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



**English Classes**

உங்கள் வீடுகளில் தனி மற்றும் குழுவாகவும் அல்லது
Zoom மூலமும்
**Gr 1 to O/L**

- Grammar
- Spoken & School Syllabus

(7443)

T.P : 077 33 14 608



**உடனடி வேலைவாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

21 வயதில் இருந்து 40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
A/L அல்லது அதற்கு சமமான கல்வி தகுதிகள் எதிர்பார்க்கின்றோம்
சம்பளம் 30,000/- முதல் 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-5767)

V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
0777 068 777


விராட் விஸ்வப் பிரம்மனே நம

# மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1945 - 04 - 11 | 2026 - 05 - 31 |



## திரு.பாலானந்தம் சிவானந்தன்

தும்பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலானந்தம் சிவானந்தன் அவர்கள் கடந்த 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலானந்தம் - ரங்கநாயகி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - செல்வரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் றதிதேவி அவர்களின் அன்புக் கணவரும் சிவறூபன், சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான வசந்தாதேவி, பரமானந்தன், சகுந்தலாதேவி மற்றும் சச்சிதானந்தன், சதானந்தன், பத்மாதேவி, நித்தியானந்தன், லலிதாதேவி, சசிகலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெகதர்சினி, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் துஜீவ், அக்ஷிதா, கவிநயா, டிவேதிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை (02.06.2026) பி.ப 01.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியளவில் கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எல்லை ஒழுங்கை, தும்பளை, பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
077 467 2492

(C-5765)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 - 08 - 1978 | 31 - 05 - 2026 |



## திரு.இரத்தினவடிவேல் இராதாகிருஷ்ணன்

நுணாவில் கிழக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினவடிவேல் இராதாகிருஷ்ணன் அவர்கள் கடந்த 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினவடிவேல் - கமலாவதி தம்பதியினரின் அன்பு மகனும் தயாபரன், தயாளன், அருள்வேல் ஆகியோரின் அன்புமிக்க இளைய சகோதரரும் அமிர்தசெல்வி, சஜீத்தா, சுபாஷினி ஆகியோரின் மைத்துனரும் ஹரிணி, கௌதமன் (மருமகன்), ஹரிஷ்ணி, அமித்தா, ஆர்த்தீஷ், ஆதித்யா, அஷ்வின், ஷாயினி, ஆதினி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை 03.06.2026 புதன்கிழமை பிற்பகல் 12 மணியிலிருந்து இறுதிக்கிரியைகள் இடம்பெற்று தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(7763)

80/7, சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டை.

தயாபரன் - 077 778 8687
தயாளன் - +1(416)936 0547
அருள்வேல் - 077 299 1810

தகவல் : குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல. 121, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org